விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு **Registered as a News paper in Sri Lanka**

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 08 சனிக்கிழமை (22.06.2002) தொலைபேசி 3378 ஒலி 185

திருமணப் பட்டுப் புடைவைகளின் கைராசியான ஸ்தாபனம்
ரவி அன் ராஜ் சில்க்ஸ்

77, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்
T.P:- 021-2469

### கடற்படையினர் யுத்த நிறுத்தமீறல்

# விடுதலைப்புலி உறுப்பினர்கள் இருவர் வேலணையில் தாக்கப்பட்டனர்

## மக்கள் திரண்டு காப்பாற்றினர்

(விசேட செய்தியாளர்)

**வேலணை தீவகத்திற்கு அரசியல் பணிகளுக்காக சென்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் செம் மணனும் உறுப்பினர் தயாளனும் கடற்படையினராலும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களாலும் நேற்று முன்தினம் இரவு வேலணை பஸ் கொம் பனிச் சந்திப் பகுதியில் வைத்துத் தாக்கப்பட்டதாகவும்,**

**இச் சமயம் தாக்குதலுக்கு இலக்கானவர்கள் சயனைட் அருந்த முற்பட்ட வேளை அங்கு மக்கள் கூக்குரலிட்டு அவர்களைக் காப் பாற்றினர் என்றும் விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.**

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் நேற்று வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தில் பத்திரிகை யாளர் மகாநாடு ஒன்றை நடத்தினர் அப் பத்திரிகையாளர் மாநாட்டில் தாக்குதல் குறித்து புலிகளின் தள பதி பாப்பா விளக்கிக் கூறினார்.

தீவகம் வேலணை பஸ்கொம் பனிச் சந்தியில் அரசியல் பணியில் ஈடு பட்டிருந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களான செம்மன்னன், போராளி தயாளன் ஆகியோர் ஸ்ரீ லங்கா கடற்படையினராலும், ஈ.பி. டி.பி உறுப்பினர்களாலும் தாக்கப் பட்டுள்ளனர். சம்பவம் நேற்று முன் தினம் இரவு 9மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் தமிழீழ விடு தலைப் புலி உறுப்பினர்களான, தீவக அரசியல் துறைப்பொறுப்பாளர் செம் மணன், போராளி தயாளன் ஆகிய இருவரும் நிராயுத பாணிகளாக அர சியற் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் அரசியல் பணியில் ஈடு பட்டிருந்த அலுவலகத்திற்கு பிக்கப் வாகனத்தில் வந்த 8பேர் அலுவல கத்தில் எரிந்து கொண்டிருந்த லைற் றரை அணைத்தனர். பின்னர் தீவக அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணனை அடையாளங்கண்டு

(8ம் பக்கம் பார்க்க)



வேலணையில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் நேற்று முன்தினம் இரவு கடற்படையினரால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து நேற்று வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தில் விடுதலைப்புலிகளின் பிரமுகர் பாப்பா தலைமையில் பத்திரிகையாளர் மாநாடு நடைபெற்றது. விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் சகிதம் சம்பவம் பற்றி பாப்பா பத்திரிகையாளர்களுக்கு விளக்கிக் கூறுவதைப் படத்தில் காணலாம்.

## உயர்மட்டக்குழு இன்று சம்பவ இடத்திற்கு செல்லும்

(யாழ்ப்பாணம்)

வேலணை பஸ் கொம்பனிச் சந்தியில் நேற்று முன்தினம் இரவு தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரமு கர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்து வதற்கு உயர்மட்டக்குழு இன்று சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அதிகாரி பொலிஸ் மா அதிபர் யாழ அரச அதிபர்; யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தர நாயகம் ஆகியோர் இக்குழுவில் இடம்பெறவுள் ளனர்.

இதேவேளை வேலணையில் நேற்று முன்தினம் இரவு 9மணிக்கு இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக யாழ் செயலகம்

## வேலணைத் தாக்குதல் சம்பவம் உடனடியாக விசாரணை நடத்துக

### பாதுகாப்பு அமைச்சின் செயலர் உத்தரவு

# பாதுகாப்பு அமைச்சின் செயலர் உத்தரவு

(கொழும்பு)

வேலணை பஸ்கொம்பனிப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் இருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாணடோ யாழ் கடற்படைத் தளபதி அட்மிரல் மொஹான் விஜய விக்கிரமாவிற்கு நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பணி உறுப்பினர்கள் நேற்று முன்தினம் இரவு வேலணை பஸ் கொம்பனிப் பகுதியில் வைத்து தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சமாதானக்குழு பிரதமரின் சமாதானச் செயலகத்திற்கு அறிவித்ததைத் தொடர்ந்தே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இந்த அவசர உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு வேலணையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கடற்படையினர் யாராவது சம்பந்தப்பட்டிருந்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தீவுப்பகுதியில் கடமையில் இருக்கும் கடற்படையினர் விடுதலைப்புலிகளுக்கு எந்தவித இடையூறும் செய்யவேண்டாம் என அறிவுறுத்துமாறும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உத்தரவிட்டுள்ளதாகத்

(8ம் பக்கம் பார்க்க)

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு செல்லவுள்ளது.

கடற்படைத்தளபதி றியல் அட்மிரல் சந்தகிரி இராணுவ உயர் தொடரபாக யாழ செயலகம் அறிக்கை ஒன்றை பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

# புலிகளின் மூதூர் அலுவலகத்தை இனந்தெரியாதோர் தாக்கினர்

(மூதூர்)

திருகோணமலை- மூதூரில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அலுவலகம் நேற்று மாலை இனந்தெரியாத கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டுள்ளது.

மாலை 6மணிக்கும் 7மணிக்கும் இடையில் அலுவலகத்திற்கான மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையில் புலிகளின் அலுவலகத்திற்குள் நுழைந்தவர்கள் அங்கிருந்த தளபாடங்களை அடித்து நொருக்கியதுடன் பெயர்ப்பலகையினையும் சேதப்படுத்தியுள்ளனர்.

இச்சம்பவத்திற்கு முஸ்லிம்

(8ம் பக்கம் பார்க்க)

### வேலணைச் சம்பவத்தையடுத்து வன்னிக்கு விரைந்த

# கண்காணிப்புக்குழுத் தலைவர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார்

(கிளிநொச்சி)

வேலணையில் நேற்று முன்தினம் இரவு விடுதலைப்புலிகள் மீது கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதல் சம்பந்தமாக நேற்று மாலை கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பீயூறு ஹெவ்டே வன்னிகுச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்தித்துப் பேசியுள்ளார்.

இப்பேச்சின் போது யாழ் தீவகத்தில் அரசியல் பணிகளில் ஈடுபட்டிருந்த தமது போராளிகள் தாக்கப்பட்டமைக்கு விடுதலைப் புலிகள் கண்டனத்தையும் ஆட்சேபத்தையும் தெரிவித்துள்ளனர். ஈ.பி.டி.பியினரும் கடற்படையினரும இணைந்து நடத்திய தாக்குதலானது ஆத்திரமூடடத்தக்க மிக மோசமான யுத்த நிறுத்த மீறலாகும்.

இந் நிலையில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இச்சம்பவம் தொடர்பாக யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளதுடன், இது தொடர்பாக உடனடியாக விசாரணை ஒன்றையும் மேற்கொண்டு கடற்படையினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

(8ம் பக்கம் பார்க்க)

### நிமலராஜன் கொலையை ஆராய

# ஐரோப்பியக் குழு யாழ்ப்பாணம் வருகை

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை தொடர்பான வழக்கை விசாரிப்பதற்கென் எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் பாதுகாப்பு அமைப்பின் ஐரோப்பிய குழுவொன்று நேற்று முன்தினம் யாழ் வந்துள்ளது.

இந்தக்குழுவில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இருவரும் பெல்ஜியத்தைச் சேர்ந்த ஒருவருமாக மூவர் அங்கம் வகிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் வந்துள்ள இவர்கள் ஊடகவியலாளர் நிமலராஜன் கொலை வழக்குகள் தொடர்பான தரவுகளை திரட்டி வருவதுடன் கொலை வழக்குடன் தொடர்புடையோர் மீது

(8ம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## சிறு விளம்பரம்

**SPOKEN ENGLISH**

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப்பயில O/L, A/L மேற்படிப்பு, வேலை பார்ப்பவர்க்கு என தனித்தனி வகுப்புகள் நடைபெறுகின்றது.

ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (5470)

**வகுப்பு**

புதிய கராட்டி வகுப்புகள் திருநெல்வேலி Y.M.H.A மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளன. சனி, ஞாயிறு காலை 7.30 மாலை 4.30 ஆசிரியர் P.ராஜன் மாஸ்டர் (கி-4510)

## கொள்ளையர் கைவரிசை

(கொழும்பு)

கொழும்பு முகத்துவாரம் பகுதி வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு நுழைந்த கொள்ளையர்கள் அங்கிருந்த 19 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் டொல்பின் ரக வாகனம் ஒன்றையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். (உ-8)

## இராசி பலன்

22-06-2002
(ஆனி 08 சனி)

துவாதசி காலை 7.47 வரை
வசாகம் ந.ப 12.42 வரை
இராகுகாலம் 8.54-10 24
நல்ல நேரம் 2.54-4 24

**மேடம்**

அதிகாரிகள் சந்திப்பு, உடற்சுகம், தொழில் சிந்தனை, மனச்சஞ்சலம்.

**இடபம்**

சந்தோசமான நிகழ்வு, உறவினர் சந்திப்பு, பணவிரயம், தனலாபம்.

**மிதுனம்**

காரிய அனுகூலம், இலட்சுமிகரம், கூட்டுமுயற்சி, போசனசுகம்.

**கடகம்**

பிரயாணம், பணவிரயம், அபூர்வசந்திப்பு, அலைச்சல்.

**சிங்கம்**

நண்பர்கள் சந்திப்பு, அன்னியர் உதவி, மனக்கட்டுப்பாடு, சுகக்குறைவு.

**கன்னி**

தொழில் கஷ்டம், பணவரவு, வீண்செலவு, உறவினர் சந்திப்பு.

**துலாம்**

திடீர்பயணம், தெய்வசிந்தை, புதிய பொருள் வருகை, விரும்பாத உறவு.

**விருச்சிகம்**

நினைத்தகாரியம்கூகைடும், உணர்ச்சிவசப்படல், நித்திரைக்குழப்பம்.

**தனுசு**

கௌரவக்குறைவு, விருந்தினர் வருகை, மனக்கிலேசம், சுவாரஸ்யம்.

**மகரம்**

அதிக பிரயாசை, காரியத்தடங்கல், ஆலயதரிசனம், உஷ்ணம்.

**கும்பம்**

குடும்பக்கவலை, ரோகபயம், உடல்வியாதி, காரிய வெற்றி.

**மீனம்**

பகைவரால் நன்மை, ஆரோக்கிய குறைவு, சகோதரர் உதவி, சத்துரு ஜெயம்

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# ஜே. வி. பியின் தமிழ்த்தேசிய விரோதப் போக்கைக்கண்டித்து மாபெரும் மறியல்போர்

## ஐக்கிய சோஷலிஸக்கட்சி முன்நடவடிக்கைகளில் ஈடுபாடு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் யாழ். மாவட்டக்கிளை கடந்த 19 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. கட்சியின் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் க. தேவதாசன் தலைமையில் வதிரி கரவெட்டியில் அங்குரார்ப்பண நிகழ்வு இடம் பெற்றது.

க. தேவதாசன் அங்கு உரையாற்றுகையில்;

ஆகாயத்தை அமெரிக்காவும் எண்ணெய்க் குதங்களை இந்தியாவும் கடலை சீனாவும் ஆக்கிரமிக்க முன்னிற்கின்றன இதன்மூலம் ஏகாதிபத்தியம் இலங்கையின் இறைமையைப் பங்குபோடக் கங்கணம் கட்டி நிற்கின்றது.

இந்நேரத்தில் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்காகவும் நிரந்தர சமாதானத்திற்காகவும் விட்டுக்கொடுக்காத போராட்டத்தையும் தீவிரமான பிரச்சாரத்தையும் முன்னெடுக்க வேண்டிய தேவை இங்கு உணரப்பட்டுள்ளது;

இதற்கான முன்னெடுப்புகளை எமது கட்சி மக்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ள இருக்கிறது.

இலங்கையிலிருந்து ஏகாதிபத்தியத்தை வெளியேற்றலும் வடக்கு-கிழக்கிலிருந்து இராணுவத்தை முழுமையாக வெளியேற்றலும் அவசியமானது. இந்த இரண்டுக்கும் இடையே பல ஒற்றுமைகள் இருக்கின்றன.

அரசியல்கட்சியாக அங்கீகரிக்கப்பட்ட எமது கட்சியின் முதலாவது மாநாட்டை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு முயற்சி எடுக்கின்றோம்.

கட்சிப் பத்திரிகையான செந்தாரகையை விரிவுபடுத்தி முன்னெடுத்துச் செல்லவுள்ளோம். மற்றும் தொழிற்சங்கம், இளைஞர் வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தல் இவையே எமது உடனடி வேலைத்திட்டங்களாகும்.

அரசு-புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் தேசிய விடுதலை தொடர்பாக எதிரான பேரினவாத செயற்பாடுகளைக் கொண்டுள்ள சக்திகளுக்கு எதிராக குறிப்பாக சிங்கள ஜே. வி. பியின் தமிழ்தேசிய விரோதப் போக்கைக் கண்டித்து மாபெரும் மறியல் போராட்டத்தை ஏனைய சக்திகளையும் ஒன்றிணைத்து ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை ஐக்கிய சோஷலிஸக்கட்சி மேற்கொண்டுள்ளது என்றார். (உ-106)

## ரட்ணம்ஸ் வி. க. உதைபந்தாட்ட அணி இன்று யாழ். வருகிறது

(யாழ்ப்பாணம்)

கொழும்பு ரட்ணம்ஸ் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட அணி இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளது.

இவ்வணி நாளை ஞாயிற்றுக்கிழமை பி. ப. 5.00 மணிக்கு நாவாந்துறை சென் நிக்கலஸ் அணியுடனும், மறுநாள் திங்கள்கிழமை பி. ப. 5.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக அணியுடனும் பல்கலைக்கழக மைதானத்தில் மோதவுள்ளது.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் இப்போட்டிகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## சிலப்பதிகார ஆய்வரங்க மாலை கலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இன்று முதல் 3 தினங்கள் யாழ். பல்கலைக் கழகத்தில் இடம்பெறவுள்ள சிலப்பதிகாரத்திற் பண்பாட்டுக் கோலங்கள் ஆய்வரங்கில், மாலை, கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்தவகையில் இன்று, மாலை 6.30 மணிக்கு இராமநாதன் நுண்கலைக் கழக இசைத்துறையினர் வழங்கும் இசைக்கச்சேரி, வயலின் இசை என்பன இடம்பெறவுள்ளன.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் க. பரமேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி. மகேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (உ)

## எற்கின் ஸ்பென்ஸ் தொகுதி கம்பனியின் சேவைகளை யாழ். மக்களும் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் 138 வருடங்கள் பழமை வாய்ந்த ஏற்கின் ஸ்பென்ஸ் தொகுதிக்கம்புனியானதுயாழ். நகரில்இல.139, ஸ்ரான்லி வீதியில் அண்மையில் தனது கிளை நிறுவனத்தினை ஆரம்பித்துள்ளது.

இங்கு,ஏற்கின் ஸ்பென்ஸ் ஓவசீஸ் ரவல்ஸ்சேவிஸஸ் நிறுவனமானது, சர்வ தேசவிமானப் பயணத்திற்கான வீமான சீட்டுக்கள் ,சர்வதேச விடுதி வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள், ஐரோப்பிய நாடுகளுக்கான புகையிரத பயணச்சீட்டுக்கள் வழங்கல் போன்ற சேவைகளை மக்களுக்கு வழங்கவுள்ளது.

மேலும் எஸ்.காகோ நிறுவனமானது சர்வதேச கூரியர் சேவை. (பொருட்கள், காகிதம் பெறுதல், அனுப்புதல்) சர்வதேச தபால் சேவை உள்நாட்டு கூரியர் சேவை ஆகிய சேவைகளையும் யாழ்.மக்களுக்கு வழங்கவுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (உ)

## குற்றவாளியாக காணப்படும் வாகனசாரதியின் அனுமதி பத்திரம்மீளப் பெறப்படும்

(கொழும்பு)

விபத்துக்களின் போதுகுற்றவாளிகளாக கருதப்படும் வாகன சாரதிகளின் வாகன அனுமதிப்பத்திரங்கள் யாவும் இரத்துச்செய்யப் படுவதென மாகாணசபைகளின் போக்குவரத்து அமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர்.

பஸ்விபத்துக்கள் தொடர்பாக பொலிசாரால் விடுவிக்கப்படும் தரவுகளைக் கொண்டே குற்றமிழைக்கும் சாரதிகள் இனங்காணப்படவுள்ளனர் என மேல் மாகாண போக்குவரத்து அமைச்சர் லசந்தசுரகியபண்ண தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ்சேவைகள் தொடர்பாக மாகாண மட்டங்களிடையே பல்வேறு நடைமுறைகள் காணப்பட்டு வருகின்றன; இதற்கமைய கொழும்பில் நேற்றுமுன்தினம் சகல மாகாணசபைகளினதும் போக்குவரத்து அமைச்சர்கள் கூடி விசேட தீர்மானங்களை எடுத்துள்ளனர்.

அண்மைக்காலங்களில் தனியார் பஸ்சேவைகளினால் வாகனவிபத்துக்கள் அதிகரித்து வருவதாக பொலிசாரால் சுட்டிக்காட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## ஞாயிறு போயா தினங்களில் கடைகளைப்பூட்டுமாறு வணிகர் கழகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஞாயிறு மற்றும் போயா தினங்களில் வர்த்தக நிலையங்களைப் பூட்டி ஒத்துழைக்குமாறு யாழ். வணிகர்கழகம் கண்டிப்பாக அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம், யாழ். வணிகர் கழகத்தில் வணிகர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பிரகாரம் மேற்படி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது;

இது விடயம் தொடர்பாக வணிகர்கழகத் தலைவர் என். கே. விஜயசேகரம் பத்திரிகை அறிக்கை ஒன்றினையும் விடுத்துள்ளார்.

அதில் அரச வங்கி வர்த்தக விடுமுறை தினங்கள், ஞாயிற்றுக்கிழமை மற்றும் போயா நாட்களில் கடைகளைப் பூட்டும் நடைமுறை நாளை முதல் அமுல்படுத்தப் படவுள்ளது.

இதனை மீறும் வர்த்தக நிலையங்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு வணிகர் கழகம் பொறுப்பேற்க மாட்டாது என்றுள்ளது. (உ-6)

## நயினை ஆலயத்தில் மக்கள் வங்கியின் விசேட கரும பீடம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைமக்கள்வங்கிக் கிளையின் விசேட கரும பீடம் நயினாதீவில் நாக பூசணி அம்பாள் ஆலய வருடாந்த விசேட உற்சவதினங்களில் இயங்கிவருகிறது.

அந்தவகையில் நாகபூசணி அம்பாள் ஆலய முன்றலில் நேற்றுமுன்தினம் தொடக்கம் 24 ஆம் திகதி திங்கட்கிழமை வரை மேற்படி விசேட கரும பீடம் இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சேமிப்புக் கணக்கை ஆரம்பித்தல், பணம் வைப்பிடல் ஆகிய வங்கிச் சேவைகளை இக்கரும பீடத்தில் பெறமுடியும் எனவும் ஜனஜயகணக்கு, மழலைகளுக்கான விசேட கணக்கு, மாணவர் மலர்ச்சிக் கணக்கு, முதலீட்டுச் சேமிப்பு கணக்கு, மகளிர் அதிர்ஷ்டக்கணக்கு, வெளிநாட்டில் வதிவோருக்கான கணக்கு, இளவயதினருக்கான கணக்கு என்பவற்றை ஆரம்பிக்க முடியும் எனவும் கணக்குகளின் நன்மைக்கேற்ப பல கவர்ச்சிகரமான பரிசுகளும் உடனேயேவழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-75)

## கூட்டம்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10 மணிக்கு சங்கத்தின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (த)

## இன்றைய போட்டி

(கோண்டாவில்)

இலங்கைவங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்மாவட்ட தாச்சிச்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் தாச்சிப் போட்டியில் இன்றைய ஆட்டத்தில் கொக்குவில் காந்திஜி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சுன்னாகம் காந்தரூபன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (வ5)

## குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பகுதியில் நேற்றுகாலை இடம்பெற்ற மோட்டர் சைக்கிள் விபத்துச் சம்பவமொன்றில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்து யாழ்போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பெரியபளையைச் சேர்ந்த சுப்பிரமணியம் தவரத்தினசிங்கம் (வயது48)என்பவரே காயமடைந்தாவராவார். (த)

## மாரடைப்பால் மரணம்

(யாழ்ப்பாணம்)

மாரடைப்பு காரணமாக யாழ்போதனா வைத்திய சாலைக்கு எடுத்துவரப்படும் வழியில் குடும்பஸ்தர்ஒருவர் நேற்றுமரணமானார்

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்தவரும் எக்ஸ்போவீடியோ கடைஉரிமையாளருமானமாணிக்கவாசகர் விஜயவர்மன்(வயது44) என்பவரே உயிரிழந்தவராவார் இவரது சடலம் யாழ்போதனாவைத்தியசாலையின் பிரேதஅறையில்வைக்கப்பட்டுள்ளது. (த)

# மக்கள் மீளக் குடியமர வசதியாக வீட்டுத் திட்டங்கள் புனரமைப்பு

(கொழும்பு)

சாக்கைதீவிலும், ்பாம்மை வெளியிலும் அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களை புனரமைப்புச் செய்து அந்த வீடுகளில் மக்களை மீள குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பிரதிஅமைச்சர் பஷிர்சேகுதாவுத் தெரிவித்துள்ளார்.

சாக்கை தீவிலுள்ள 31 தமிழ்க் குடும்பங்களினதுவீடுகள் 14 இலட்சம் ரூபாவிலும் பொம்மை வெளியிலுள்ள 32 முஸ்லிம் குடும்பங்களினதுவீடுகள் 44 இலட்சம் ரூபா செலவிலும் திருத்தியமைக்கப்படவுள்ளன.

இந்தவீடுசளில்வசித்துவந்த குடும்பங்கள் நாட்டின பல்வேறு பகுதிசளுக்கும் இடம்பெயர்ந்துசென்றுள்ள வேளையிலும் நாட்டில் தற்போது அமைதியான சூழ்நிலை ஏற்பட்டுள்ளமையினால் அக் குடும்பங்களை மீள குடியமர்த்துவதற்கு திட்டமிடப்பட்டுவருவதாக அவர்மேலும் கூறியுள்ளார். (த)

## கொக்கிப் போட்டி வட்டு ஒல்ட் கோல்ட்ஸ் அணிக்குவெற்றிக் கிண்ணம்

(சுண்டுக்குளி)

யாழ்.மாவட்ட கொக்கிச் சங்கம், அதில் அங்கம் வகிக்கும் கழக அணிகளுக்கிடையில் செலான் வங்கியின் அனுசரணையுடன் நடத்தி வந்த கொக்கிப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டங்களும் பரிசளிப்பு வைபவமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை, யாழ் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் இடம்பெற்ற 3ஆம் இடத்திற்கான தெரிவு ஆட்டத்தில் யாழ்.பல்கலைகழக அணி அதனை எதிர்த்துஆடிய வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வென்று 3 ஆம் இடத்தைதனதாக்கிக் கொண்டது.

இவ்வாட்டத்தில் சிறந்த வீரனாக யாழ்ப்பாணக் கல்லூரி அணி வீரன் எஸ் பிரதீபன்தெரிவுசெய்யப்பட்டார்.

நடுவர்களாக ஏ.செல்வச்சந்திரன்,எஸ்.உதயன்ஆகியோர் கடமையாற்றினர்.

அதனைத்தொடர்ந்துஇடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் வட்டு ஒல்ட் கோல்ட்ஸ் அணி, அதனை எதிர்த்து ஆடிய தெல்லிப்பழை கிறாஸ் கொப்பஸ் அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வென்று சாம்பியன் கிண்ணத்தை தன தாக்கிக்கொண்டது.

இவ்வாட்டத்தில் சிறந்த வீரனாகஒல்ட்கோல்ட்ஸ்அணி வீரன் ரி.அருட்செல்வனும் இப்போட்டித் தொடரில் சிறந்த வீரனாக சி.ர.அரவிந்தனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகயாழ.பல்கலைக் கழகத்துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளைகலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார். (உ-110)

## கூட்டம்

(காரைநகர்)

ஊர்காவற்றுறைப் பிரதேச சிறுவர் உரிமைகள் அபிவிருத்திக் குழுக் கூட்டம்எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10 30மணிக்கு ஊர்காவற்று றை உதவி அரச அதிபர் பணிமனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-246)

## படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக புற நிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து (Charlie Chaplin) சார்லி சப்பிளினின் திரைப்பட வட்டங்களைதொடர்ச்சியாக காண்பித்து வருகின்றது. இந்த வகையில் இன்று மு. ப. 10. 00. மணிக்கு Modern Time, Three Stoogies ஆகிய இரு திரைப்படங்கள் காண்பிக்கப்படவுள்ளன.

ஆர்வலர்கள்எவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம் என புற நிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## மயானம் துப்புரவு

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு இந்து மயானம்,வலி கிழக்கு பிரதேச சபை ஊழியர்களினால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து தகனக்கிரியைகளை சிரமமின்றி செய்யக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. (உ)

## 66 ஆயிரம் இலங்கையர் இந்தியாவில் தஞ்சம்

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் யுத்தம் காரணமாக 7 லட்சம் மக்கள் இடம் பெயர்ந்து உள்ளதாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா தெரிவித் துள்ளார்.

இருதசாப்தங்களாக இடம் பெற்றுவந்த இக் கொடிய யுத்தம் காரணமாக நாட்டிற்குள்ளேயே இரு தொகுதிமக்கள் இடம்பெயர்ந்து வசித்து வருகிறார்கள். மற்றோர் தொகுதியினர் வெளிநாடுகளில் வசித்து வருகிறார்கள் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவர்களில் இந்தியாவில் மட்டும் சுமார் 66 ஆயிரம் இலங்கை மக்கள் அகதிகளாக தங்கியுள்ளனர்.

இவர்களை மீளக் குடியேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## கொழும்பு-தூத்துக்குடி கப்பல் சேவை ஓகஸ்டில்

(கொழும்பு)

கொழும்புக்கும் தூத்துக்குடிக்குமான கப்பல் சேவை எதிர்வரும் ஓகஸ்ட்மாதத்தில் ஆரம்பமாகும் என்றுதஹிந்து பத்திரிகை செவ்வாயன்று தெரிவித்துள்ளது.அரசாங்க மட்டத்திலான சம்பிரதாயங்கள் முடிவுற்றதும் ஓகஸ்டில் கப்பல் சேவை தொடங்கும் என்று இந்திய கப்பற்போக்குவரத்து அமைச்சர் பிரகாஷ் கோயல் தெரிவித்துள்ளார். இலங்கையிலிருந்து சென்ற தூதுக்குழுவொன்றுடன் பேச்சுக்கள் நடத்திய பின்அமைச்சர் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கைத் தூதுக்குழுவுக்கு தலைமை தாங்கி சென்ற இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் தலைவர் முகாமில் இது தொடர்பான புரிந்துணர்வுஒப்பந்தமொன்று ஓகஸ்டிற்கு முன்னர் ஒப்பமிடப்பட்டு விடும் எனத் தெரிவித்தார். (உ)

## நிறுவுநர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயநிறுவுனர்தின விழா, அதிபர் திருமதி வி.சிவபாலன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில், முன்னைநாள் அதிபர் சமூகஜோதி கா.கணேசதாசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (உ)

## ஒய்வூதியக் கணிப்பு கச்சேரியில் இடம்பெறாது

(யாழ்ப்பாணம்)

அரச ஊழியராக கடமையாற்றுபவர்களுக்கானஒய்வூதியக் கணிப்புக்கள் இனிமேல் அவர்கள் பணியாற்றும் திணைக்சளங்களினூடாகவே மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

இவ்வளவு காலமும் ஒய்வூதியக்கணிப்புக்கள் கச்சேரியில் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இனிமேல்அந்தந்தத்திணைக்களங்களே இக் கணிப்பை மேற்கொள்ள வேண்டுமென கொழும்பு மாளிகாவத்தையில் உள்ளஒய்வூதியத்திணைக்களம் சகல அரசதிணைக்களங்களுக்கும் சுற்று நிருபம் அனுப்பி வைத்துள்ளது. (உ 19-6)

## பொலிஸ் நிலையம் முன் மறியல் போர் நடத்த மேயர் ஆயத்தம்

(யாழ்ப்பாணம்)

மணிக்கூட்டுக் கோபுர வீதியில்இருந்துமுனியப்பர் கோயிலுக்குச் செல்லும் வீதி, மற்றும் நூலகப் பகுதிக்குச் செல்லும் வீதி என்பவற்றைத் தொடர்ந்தும் படையினர்கட்டுப்பாட்டில் வைத்திருப்பார்களாயின்,

யாழ். பொலிஸ் நிலையம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது.

அண்மையில் இடம் பெற்ற மணிக்கூட்டுக் கோபுரத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ். மாநகர முதல்வர் எஸ். கந்தையன் மேற்கண்டவாறு தெரிவித்தார். (உ-6)

## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை - 13

(உற்சவகாலம்)



### நல்லருள் புரிவாயம்மா

நாகமணித்தீவுறையும் நாகபூஷணியம்மையே
நாகபாம்பு மலர் அளிக்கும் நாகம்மையே-உனை
நாடிவரும் அடியார்க்கு நலமளித்து
நாட்டுமக்கள் யாவரும் நல்வாழ்வு வாழ
நாட்டில் நிரந்தர சமாதானம் நிலைத்து நிற்க
நயினை நாகேஸ்வரியே நல்லருள்புரிவாயம்மா

துன்பங்கள் துயரங்கள் தொலைந்து
இன்பங்கள் இனிமைகள் மலர்ந்து-நிரந்தர
சமாதானம் சந்தோஷம் நிலைத்து
மக்கள் மகிழ்வுடன் கூடிவாழ
சப்ததீவுகளுக்கும் சக்கரவர்த்தினியாகத்திகழும்
நயினை நாகபூஷணியே நல்லருள்புரிவாயம்மா

-நயினை முத்து-

### சூடோமோ வாகை?

காலத்தின் நீதியே ஈசனில் பாதி நீ
கன்னியே எவ்வுயிர்த் தோற்றமும் நீயே
மூவர்க்கும் யாவர்க்கும் மாசத்தி நீயே
நாகத்தின் பூக் கொண்ட நயினையின் ஜோதி
வேலொத்த விழி ஆணை வேண்டினேன் வாழ்வு
பாலொத்த மீன் பாயும் தாயுந்தன் தேசம்
வேழங்கள் புலி கூடி மேளங்கள் கொட்ட
ராகங்கள் கடலாட சூடோமோ வாகை

சூ.துரைராஜன்

### பிள்ளைவரம் தந்திடுவாள் நாகம்மாள்

எடுப்பு
இல்லையொரு பிள்ளையென ஏங்குகின்ற
பெற்றோர்க்குப்
பிள்ளைவரம் தந்திடுவாள் நாகம்மாள்
தொடுப்பு
தொல்லையெலாம் போக்கி இல்லம் துலங்கிவளம்
பொங்கிடவே
பல்வளமும் பெருக்கிடுவாள் பாரம்மாள்
முடிப்பு
நாகவழி பாடுசெய்து நன்றாய்ந்து தொட்டில்கட்டி
யோகமுள்ள பிள்ளைகளைப் பெற்றிடுவீர் - சிவ
யோகமுக தேசுடனே யுகசக்தி அருளுடனே
ஏகமுற வாழ்ந்திடலாம் வாருங்களே.

நயினைக் கவிஞர்
நாக சண்முகநாதபிள்ளை

### தாயே இன்னருள் தாராய்!

பொங்கிடும் கடலில் தங்கிடும் தாயே
புவனமீ ரேழை ஆட்சிசெய் வாயே
சங்கர னிடத்தில் அமர்ந்திருப் பாயே
சஞ்சல மோட்டி யருள்தரு வாயே
மங்கல நயினை மாட்சிசெய் மானே
வரும்பிணி யகற்றும் மருத்துவ மாதே
எங்களின் இனமும் இன்னலற் றுய்ய
ஈஸ்வரித் தாயே இன்னருள் தாராய்!

நயினைக் கவிஞர்
இராகுலன்

### நமையாள் நயினைநாகம் மாளே

தென்னங்குலை குலையாப்பொலி வெய்தும்
பொழில் சூழ்ந்து
அன்னம்பயில் பொய்கைஅகன் துறையும்
மணல் பரப்பக்
கன்னிமகளிர் நேர்த்திக்கட னாற்று
மணித் தீவில்
நன்மைபுரிந் துநமையாள் வாள்
நயினைநாகம் மாளே.


சிவ. சண்முகவடிவேல்

# யாழ். குடாநாட்டில் தென்னைகளில் செவ்வண்டு

# தாக்கத்தைக் கட்டுப்படுத்த வழிமுறைகளுண்டு

தென்னையை இறப்பிற்குள்ளாக்கும் இந்த அபாயகரமான பீடையின் விஞ்ஞானப் பெயர் ''றைக்கோபேரஸ் பெருஜீனியஸ்' (Rhyncho phorus ferrugineus) இதனை செவ்வண்டு (Red-weeril) எனவும் அழைப்பர். இப்பீடை குடாநாட்டின் எல்லா இடங்களிலும் தென்னையில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. முக்கியமாக இளம் தென்னைகளினைத் தாக்கி வட்டினை சரித்து விழுத்துகின்றது.

## சேதத்தின் தன்மையும், இனங்காணலும் செவ்வண்டின் வாழ்க்கை வட்டம்




★ முதிர்ந்த வண்டு சுமார் 35mm நீளமும் 10mm அகலமும் செப்பழுப்பு நிறமும் உடையதுவிசேடமாக நீண்ட உறிஞ்சி காணப்படும். உடம்பின் மத்திய பாசத்தின் மேற்பரப்பில் வட்டமான கரிய புள்ளிகள் காணப்படும்.

★ 7-20 வயதுடைய இளம் தென்னைகளில் இலைக்காம்புகளிலும்மரத்தண்டிலும் உண்டாக்கும் புதிய காயங்களில் பெண் வண்டு ஏராளமான சிறிய வெள்ளை நிறமான நீள்மட்ட முட்டைகளை இடும். முட்டைகள்3-5 நாட்களில் பொரித்து குடம்பிகள் தோன்றும். இவை தண்டிலும் முளைப்பாகத்திலும் உள் நோக்கி துளைத்து நாரிழையத்தினை உண்டு, மரத்திலிருந்து சக்கை சக்கையாக வெளியேற்றும். இதன் பின்பு தென்னையின் வட்டு சரிந்து விழலாம் 35mm நீளமாக வளரும் புழுக்களை பழுப்பு நிறத் தலையாலும், வெண்ணிறஉடலினாலும்இலகுவாக அடையாளம் காணலாம். ஏறக்குறைய55 நாட்களிற்குப் பின்பு, புழு நார் போன்ற பொருட்களினால் புழுக்கூட்டினை (Cocoon)உருவாக்கும். புழுக்கூட்டினுள் புழு இருக்கும் போது பீடையின் ஓய்வு காலமாகும். அப்போது அது கூட்டுப்புழு என அழைக்கப்படும். சுமார் 20 நாட்களின் பின்பு கூட்டிலிருந்து முதிர் வண்டு வெளி வந்து ஒரு துவாரத்தினூடாக வெளியேறும்.

### பீடையை இனங்காணல்

தாக்கத்தின் ஆரம்ப நிலையில் பீடையைஇனங்காண்பது மிகவும் கடினம்அனேகசந்தர்ப்பங்களில் மரம் மோசமாக சேதம் அடைந்த பின்பு தான் செவ்வண்டு இருப்பது தெரிய வரும் எனினும்நன்றாக மரத்தினை அவதானித்தால் பின் வரும் அறிகுறிகள் தென்படும்,

அ) மரவட்டு அல்லது மரத்தண்டின் சில துவாரங்கள் மூலம் மெல்லப்பட்ட நார் வெளியே சக்கை சக்கையாகத் தள்ளப்பட்டிருக்கும். இதே நேரம் மண்ணிறமான பிசின் துவாரத்திலிருந்து வழியும்.

ஆ) குருத்து வாடிவதங்கிப் போயிருக்கும்.

இ) மரத்துடன் காதை வைத்துக் கேட்டால் 'நற நற' என்ற சத்தத்தினை கேட்கலாம்.

### செவ்வண்டினால் ஏற்படும் சேதத்தினை தடுப்பதற்கான வழி முறைகள்

● இளம் தென்னங்கன்றுகளை கிரமமாகப் பயிற்றப்பட்டவர்களைக் கொண்டு பரிசோதித்தல்.

● மரத்தண்டில் அல்லது இலைக் காம்பு(ஓலைமட்டை) பகுதியில் ஷெல் பட்ட அல்லது வேறு காயங்கள் ஓட்டைகள் இருப்பின், தார் அல்லது மணல்கலக்கப்பட்ட சீமெந்தின் மூலம் அதனை அடைத்து விடலாம்.

● இளம் தென்னைகளில் மண்ணில் நீர்க்கசிவுஏற்பட்ட பின்பு, செவ்வண்டுத் தாக்கம் நிகழக் கூடும் என அவதானிக்கப்பட்டுள்ளது.

● கருவண்டினால் தாக்கப்பட்ட மரங்களில் சிலவேளை செவ்வண்டு விழும். கருவண்டினால் தாக்கப்பட்ட வட்டுப் பாகத்தில் செவ்வண்டு முட்டைகளை இடும். இந் நிகழ்வால் மரத்தின் வட்டு முறிவடைந்து விழும்.

● மிகவும் உக்கிரமாகத்தாக்கப்பட்ட குணமடையாத நிலையிலுள்ள மரத்தினை தறித்து உடன் எரித்தல் வேண்டும்.

### கட்டுப் படுத்தல்

தெனையின் குருத்து வாடுமளவிற்கு தாக்கம் உக்கிரமடைந்து மரத்தின் வட்டு சரிவடையும் நிலையில் இருந்தால், சிகிச்சை பலனளிக்காது அப்படியான மரங்களைத் தறித்து எரித்து விடுதல் வேண்டும். (பூரணமாக) சிபார்சு செய்யப்பட்ட பூச்சி நாசினிகள்.

(1) மெற்றாஸ்சிஸ்ரொக்ஸ் 25%Metasgsystox25%

(2) மொனோகு ரோடோபஸ் 60%
Monocrotophos 60%

மரத்தண்டில் வண்டு துளைத்த அல்லது காயப்பட்ட, சக்கைசக்கையாக வெளித்தள்ளல் ஏற்பட்டுள்ள பகுதிக்கு கீழே சில அங்குலங்கள் விலத்தி 5 Cm ஆழமான துளை ஒன்றினை துறப்பணத்தினால், அல்லது துளையிடும் கருவியினால் 45 (பாகை) சரியாகத் துளையிடவும். துவாரத்தினுள் புனலினை செருகவும். தென்னை மரத்தினையும், புனலினையும் இணைக்கும் பகுதி இறுக்கமாக இருப்பதற்கு தார்அல்லது மெழுகினை உபயோகிக்கலாம். ஒழுகாத நிலையில் அரைகப் தண்ணீர் விட்டு பார்க்கவும். ஒழுகுவது அவதானிக்கப்பட்டால், திரும்பவும் இறுக்கமாக புனலினை வைத்து தார் பூசவும். பின்பு, கையுறை அணிந்து, ஒருமரத்திற்கு மெற்றாஸ்சிஸ்ரொக்ஸ் 3 தேக்கரண்டி 15 ml (மில்லி லீற்றர்) விடவும். எச்சரிப்பு அறிவித்தலை தொங்க விடவும். அதாவது $2\frac{1}{2}$ மாத காலத்திற்கு தேங்காய் அல்லது இளநீர் பறித்தல் தடை செய்யப்பட்டுள்ளது என்று எழுதி அறிவித்தல் தொங்கவிடவும்.

பூச்சி நாசினி முழுவதும் மரத்தினுள் சென்ற பின்பு, புனலினை மெதுவாக எடுத்து விட்டு, காயப்படுத்தப் பட்ட பகுதிக்கு தார் அல்லது மணல் கலக்கப் பட்ட சீமெந்தினை இட்டு ஓட்டையை அடைத்து விடவும். எல்லாம் முடிந்த பின்பு சோப்பினால் கைகளை நன்றாகக் கழுவுதல் வேண்டும். பூச்சி நாசினிகள் ஆபத்தானவை. எனவே, கவனமாகக் கையாளுதல் வேண்டும்.

எனவே, தென்னைச் செய்கையாளர்களே! இந்த வண்டின் தாக்கம் உங்கள் தென்னைகளில்காணப்படுமிடத்து, இந்த சிகிச்சை முறையினை மேற்கொள்ளலாம். மேலதிக விபரங்கள் தேவைப்படுமிடத்து, ஒவ்வொரு புதன் கிழமைகளிலும். அலுவலக நேரத்தில் நல்லூர் கமநல சேவை நிலையக் கட்டடத்தில் அமைந்துள்ள தென்னைப் பயிர் செய்கைச் சபையில், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரை அணுகலாம். ●

**ஜெ. சத்தியேந்திரன்**
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்

## விற்பனை நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் இயங்கும் தொழில் துறைத்திணைக்களத்தின் விற்பனை நிலையம் ஒன்று, இன்று பி.ப.2.00 மணிக்கு யாழ். பிரதேச செயலர் ப. செந்தில்நந்தனனால் திறந்து வைக்கப்படவுள்ளது. (உ-6)

## வேதாகம ஆங்கிலப் பேச்சுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். வை. எம். சி.ஏ. ஏற்பாட்டில் வேதாகமம் தொடர்பான ஆங்கில பேச்சுப் போட்டி ஒன்று எதிர் வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டி கீழ்ப் பிரிவு, மத்தியபிரிவு, மேற் பிரிவு என மூன்று பிரிவுகளாக இடம்பெறவுள்ளது. (உ-6)

## தொலைபேசி இணைப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு உபதபாலகத்திற்கு புதிதாக தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.
(உ-249)

## பொங்கல் விழா

(ஏழாலை)

ஏழாலை மேற்கு ஞானவைரவர்ஆலயபொங்கல்விழா இன்று காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது.
(உ-206,8)

## மாகாணமட்ட பூப்பந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுத்துறை அமைச்சினால் வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில்நடத்தப் படவிருக்கும் பூப்பந்தாட்டத்தில் பங்கு கொள்ள விரும்பும் பூப்பந்தாட்ட அணிகளை இம் மாதம் 26 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் யாழ். மாவட்டச் செயலக விளையாட்டு அலுவலகத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

## நடைபாதை வியாபாரிகள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

நடைபாதை வியாபாரிகளை கோட்டை முனீஸ்வரன் ஆலயப் பகுதிக்கு மாற்றுவது குறித்த நடவடிக்கைகளில் யாழ். மாநகர முதல்வர் எஸ். கந்தையன் ஈடுபட்டு வருகிறார். (உ-6)

சமாதான முயற்சிகள் தொடர்பில்

## சகல கட்சிகளுடனும் கருத்துப் பரிமாற்றம்

(கொழும்பு)

நாட்டில் சமாதானமுயற்சிகள் தொடர்பாக சகலஅரசியல் கட்சிகளினதும் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்படும் என பிரதமர்ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ்தேசிய கூட்டமைப்பினரை கடந்த புதன்கிழமை சந்தித்தபோதே பிரதமர்இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளுக்கு பொதுஜனஐக்கிய முன்னணியின் ஆதரவு முக்கியமானது. அத்துடன் தமிழ்தேசியகூட்டமைப்பு உட்பட்ட பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் ஏனைய கட்சிகளின் கருத்துக் கண்ணோட்டங்களும் பரிமாறிக் கொள்ளப்படும்.

அரசாங்கம் பொதுஜனஐக்கிய முன்னணி அங்கத்தவர்களை உள்ளடக்கிய சமாதான முயற்சிகளுக்கான செயற்குழுவை நியமிக்கவுள்ளதாகவும் மேலும்பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐக்கியதேசிய முன்னணி அரசுமதத்தலைவர்களுடனும், சமாதானத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவோருடனும் கூட பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது என அவர் அங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.
(உ-8)

## இலங்கைச்சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளித்து கனடாவில் தீர்மானம்

(ரொறன்ரோ)

கனடாவின் தலைநகரான ரொறன்ரோவில்நடை பெற்ற சர்வதேச இஸ்லாமிய மக்கள் தலைமைத்துவ மாநாட்டில் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு பூரணஆதரவளிப்பது என்றும் சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களையும் ஒரு தரப்பினராக ஏற்றுக் கொண்டிருப்பதனை வரவேற்பதாகவும்தெரிவித்து முக்கிய தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் பங்குபற்றும் முகமாக கனடா சென்றிருந்த அமைச்சர் ரவூப்ஹக்கீம் அங்கு இலங்கையின்சமாதான முயற்சிகள் குறித்து நீண்ட உரை ஒன்றினை ஆற்றியிருந்தார்.

இந்த உரையினை அடுத்து சர்வதேச இஸ்லாமியமாநாட்டில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கனடா சென்ற அமைச்சர் ரவூப்ஹக்கீம் அந்நாட்டின் முன்னாள் பிரதமர் மற்றும் அரசியலமைப்பு நிபுணர்கள் ஆகியோரைச்சந்தித்து ஆலோசனைகளைப் பெற்றுள்ளார்.

அமைச்சர் அங்கிருந்துபிரிட்டனுக்கும் செல்லவுள்ளார்.
(த)

## அம்பாறையில்குடியமருமாறு தமிழ் மக்களுக்கு விடுதலைப்புலிகள்அழைப்பு

அம்பாறை மாவட்டமத்திய முகாம் 4ஆம் கொலனியிலுள்ள தமிழ் மக்களை மீண்டும் வந்து குடியேறுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேச மக்களை மீண்டும் தமது சொந்தஇடங்களில் வந்து குடியேறுமாறு நாவிதன் வெளி பிரதேச தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் ஈழவண்ணன் அறிவித்துள்ளார்.
(உ-8)

# இன்று ஒரு தகவல்

## மேதையைப் பாராட்டிய மேன்மையான உள்ளம்

கலைவாணருடன் அண்ணா நல்ல தோழமை கொண்டிருந்தகாலம், அவரது இல்லத்திற்குச் சென்றிருந்த பொழுதெல்லாம் மனதுக்கும், அறிவுக்கும் கலைவாணர் எத்தனையோ விதங்களில் சுவையூட்டி வந்தார். அங்குதான் அண்ணாவுக்கு நாதசுர சக்கரவர்த்தி திருவாவடுதுறை டி. என். இராசரத்தினம் பிள்ளையின் மேதாவிலாசம் தெரியவந்தது. கலைவாணர் தமது இல்லத்துக்கு அண்ணாவை வரவழைத்து டி. என். இராசரத்தினம் பிள்ளையை அவருக்கு முன் நாதசுரம் வாசிக்கச் செய்தார். அந்தச் சந்திப்பும் வாசிப்பும் அண்ணாவைப் பெரிய அளவில் கவர்ந்திருந்தன.

மற்றொரு சமயம், அண்ணாவின் நண்பர் வேதாசலத்தின் வீட்டில் அவரது குழந்தைகளுக்கு நடைபெற்ற எழுத்தறிவிப்பு விழாவில் அண்ணா பேசினார். அதே விழாவில் டி. என். இராசரத்தினம் பிள்ளை இசை விருந்தளித்தார். தம் பாராட்டுரைக்கு நடுவே அண்ணா நாதசுர மேதையின் இசைஞானம் பற்றிக் குறிப்பிட்டார். 'நாம் இங்கு கேட்ட இந்த இனிய ஓசையை, மேல் நாட்டவர் கேட்க வேண்டுமானால் குறைந்தது ஐம்பது வாத்தியங்களை வைத்துக் கொண்டு ஐம்பது பேர் பங்கிட்டுக் கொண்டு, ஒவ்வொருவரும் தக்க காலத்தில் ஒன்றாகச் சேர்ந்து இசை எழுப்புவார்கள். அதைத்தான் நாம கேட்கமுடியும். ஆனால் இங்கு ஒரே இசைக்கருவியைக் கொண்டே அதனை அனுபவிக்கமுடியும்.

நமது நண்பர் இராசரத்தினம் அவர்களது நாயனத்தைத் தொலைவில் உள்ளவர்கள் கேட்க நேரிட்டால், அங்குஏதோ வீணைவாசிக்கப்படுகிறதென்றும், சிலவேளைகளில் குழல் ஒலிஎழுப்புவதாகவும், இன்னும் சிலவேளைகளில் முழவொலி கிளப்புகிறதென்றும் சந்தேகப்படுவர். ஆனால் பக்கத்தில் வந்தபின்னர் தான் அதனைப்பார்த்ததும், இந்தச் சாதாரண மரக்கட்டையில் இவ்வளவு அருமையான இசை எப்படி எழுப்பமுடிந்தது என்று ஆச்சரியப்படுவர்.

அகிலஉலக நாதசுர இசை மன்னராகத் திகழ்ந்த டி.என். இராசரத்தினம் பிள்ளைக்கு வேறுசிலசிறப்புகளும் சேரவேண்டும் என்ற ஆசையும்அண்ணாவுக்கு இருந்தது. அவரது இசைப்புலமை சில இல்லங்களுக்குள்ளேயோ, இசைமேடைகளுக்கு மத்தியிலோ முடங்கிவிடக்கூடாது என்ற எண்ணம்கொண்டிருந்தார் அண்ணா.

மற்றொரு மகத்தான கருத்தும்அண்ணாவுக்கு இருந்தது. கவிஞர் பாரதிதாசனுக்கு சென்னையில் மணிவிழாநடத்திப் பணமும், பாராட்டும் அளித்ததுபோல், நாதசுர மேதைக்கும் ஒருவிழா நடத்தப்படவேண்டும் என்றும் ஆசை கொண்டார். அக்கருத்தை வேதாசலம் வீட்டில் நடைபெற்ற எழுத்தறிவிப்பு விழாவில் அவர் வெளியிட்டார். ஆனால்அண்ணா குறிப்பிட்ட கருத்தை அப்பொழுது அவ்வளவாகயாரும் கவனிக்கவில்லை. கருத்தோடு அதைக் கேட்டிருந்தால் பெரிய அளவில் திருவாவடுதுறையார் கௌரவிக்கப்பட்டிருப்பார். பிற்காலத்தில் டி. என். இராசரத்தினம் பிள்ளைக்கு ஏற்பட்ட வறுமைப்பிணி அகன்றிருக்கும்.

நவீனன்

## டெங்கு காய்ச்சல் அச்சுறுத்தல்
# முக்கியபாடசாலைகள் மூடப்பட்டன

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரப்பும் நுளம்பு பரவியுள்ள காரணத்தால் கொழும்பு றோயல் கல்லூரி நேற்று முதல் தற்காலிகமாகமூடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சரினால் முன் வைக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அமைச்சரவை அந்தஸ்து பெற்ற அமைச்சர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக கல்வியதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு றோயல் கல்லூரி உட்பட அதனை அண்டிய பல பாடசாலைகளில் இந் நுளம்பு பெருகும் அபாயம் தோன்றியுள்ளதனால், அவற்றினை ஒழித்தழிக்கும் நடவடிக்கைகள் முற்றுப் பெறும் வரை பாடசாலை மூடப்படவுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பாடசாலை மட்டத்தில் டெங்கு நோயை ஒழிக்கும் நோக்குடன் சகல பாடசாலைகளையும்சுகாதார அதிகாரிகள் சோதனையிட வேண்டுமென பிரதமர்ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்நுளம்புத் தாக்கம் பரவுமிடத்து சம்பந்தப்பட்ட அனைத்து பாடசாலைகளையும் மூடிவிடுமாறு சுகாதார அமைச்சர் தயாரட்ண பணிப்புரை வழங்கியுள்ளார். (உ-8)

## சிறுவர் நாடகப் போட்டி முடிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான சிறுவர் நாடகப் போட்டியில், முதலாம் இடத்தை பெரியபுலம் மகாவித்தியாலயமும், இரண்டாம் இடத்தினை யாழ். இந்து மகளிர் கல்லூரியும் மூன்றாம் இடத்தினை கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன. (உ-19)

## முகாம் அமைக்கும் முயற்சி கைவிடப்பட்டது

(திருநெல்வேலி)

பருத்தித்துறை மணியகாரன்சந்திப்பகுதியில் தனியார் காணி ஒன்றில் படைமுகாம் அமைத்து வந்த படையினர் அம்முயற்சியைக் கைவிட்டு கடந்தபுதன்கிழமை அவ் இடத்தில் இருந்து வெளியேறியுள்ளனர். (த-43)

## பத்திரிகையாளர் விருது

(கொழும்பு)

'பழம் பெரும பத்திரிகையாளருக்கான' விருதுவீரகேசரியின் முன்னாள் உதவி ஆசிரியர் டேவிட்ராஜூவுக்கும் 'இளம்பத்திரிகையாளர்விருது வீரகேசரி பத்திரிகையாளர் ஸ்ரீகஜனுக்கும் இவ்வாண்டு கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த விருதினை பத்திரிகை ஆசிரியர் குழுவினர் வழங்கிக் கௌரவித்தனர். (வ)

## களவாடப்பட்ட சைக்கிள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

களவாடப்பட்ட பெண்களுக்கான துவிச்சக்கர வண்டி ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும்,

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அதனைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் யாழ். பொலிஸ் நிலைய அதிகாரி அறிவித்துள்ளார். (உ-19)

## வத்தளை நீதிமன்றில் தீவிபத்து

(கொழும்பு)

வத்தளை நீதிமன்றத்தில் ஏற்பட்டதீவிபத்தினால்அங்கு வைக்கப்பட்டிருந்தவழக்குகள் தொடர்பான கோப்புகள் அனைத்தும் எரிந்து சாம்பலாகியுள்ளன.

கடந்தசெவ்வாயன்று இடம்பெற்ற இந்த தீவிபத்தில் நீதிமன்றத்தின் ஆவணப்பகுதி முற்றாக எரிந்துநாசமாகியுள்ளது. (த)

## வினைத்திறன் காண் தடைப் பரீட்சையை நடாத்தக் கோரிக்கை

(சுதுமலை)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு 3 வருடகாலம் பூர்த்தியடைந்தும் இன்னும் அவர்களிற்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சை நடத்தப்படவில்லை.

இதனை விரைவில் நடத்துமாறு கோரி உள்ளூராட்சி உதவியாளர் சங்க செயலாளர் செ.ரமேஸ் பொது நிர்வாக உள்ளூராட்சி கூட்டுறவு வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர்ஆகியோருக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

கடந்த 16-05-99 முதல் நியமனம் பெற்ற உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு மேற்படி தடைப் பரீட்சை நடைபெறாமையால் பதவி உயர்வு, வகுப்பு எதுவும் வழங்கப்படவில்லை.

இதேவேளை, வடக்கு -கிழக்கு மாகாணங்களில்72 உள்ளூராட்சி மன்றங்களில் உதவி செயலாளர்களாக கடமையாற்றி வருவதும்குறிப்பிடத்தக்கது. (உ-252)

## திரியாயில் மீள்குடியேற்றம் ஆராய விசேட குழு

(திருகோணமலை)

திருகோணமலை திரியாய் கிராமவாசிகளை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டு இது தொடர்பாக ஆராயப்படுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா உறுதியளித்துள்ளார்.

அண்மையில் தமிழர் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இரா. சம்பந்தன் தலைமையில் பிரதமரை சந்தித்து கலந்துரையாடிய போது அவர் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார்.

இதே வேளை, திரியாய் கிராமப்புற மக்கள் தங்களை மீளக் குடியேற்றுவதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனக் கோரி கடந்த புதன்கிழமை திருகோணமலை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் கையளித்துள்ளனர்.

கடந்த 12வருடங்களின்பின்னர் அப் பகுதியைப் பார்க்கச் சென்ற திருமலை நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் உட்பட திருகோணமலை அரசியல் துறை பொறுப்பாளர்களை கடந்த 12 ஆம் திகதி படையினர் தடுத்து நிறுத்தியமைதொடர்பாகவும் கூட்டமைப்பினர் பிரதமரிடம் பிரஸ்தாபித்துள்ளனர். (உ-8)

## நெல்லியடிப் பகுதியில் அட்டைத் தொலைபேசிகள் இயங்குகின்றன

(நெல்லியடி)

வடமராட்சிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளஅட்டைத் தொலைபேசி நிலையங்கள் நேற்றுமுதல் இயங்குகின்றன.

நெல்லியடியில் கொடிகாமம் வீதி, பருத்தித்துறைவீதி, நெல்லியடிச் சந்தை ஆகிய இடங்களில் இந்த அட்டைத் தொலைபேசி நிலையங்கள் அமைந்துள்ளன.

றைரெல் (Tritel) நிறுவனத்தினால் அமைக்கப்பட்டுள்ள இத்தொலைபேசி நிலையங்களின் செயற்பாடுகள் மற்றும் பயன்கள் குறித்து அந் நிறுவனத்தின் யாழ்ப்பாணத்துக்கான தொழில்நுட்ப ஆதரவு அதிகாரி எஸ். சுபையின் விளக்குகையில்,

இலங்கையிலேயே யாழ்ப்பாணத்திலும், கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலுமே இந்தச் சேவையினை நாம் ஆரம்பித்துள்ளோம்.

இதன்மூலம், டிஷ்அன்ரனா ஊடாக செய்மதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி உலகில் எப்பாகத்தில் உள்ளவருடனும்தொடர்புகொள்ள முடியும்.

ஒருடிஷ் அன்ரனா மூலம் 6 தொலைபேசி இணைப்புக்களை ஏற்படுத்த முடியும்.

தற்பொழுது இங்கு 200 ரூபா பெறுமதியான தொலைபேசி அட்டைகளே பாவனைக்கு விடப்பட்டுள்ளன.

இந்த அட்டைகள் ''பார் கோட்'' அடிப்படையில் செயற்படும். இந்த அட்டையில் ஒரு பகுதி காந்தமயப் படுத்தப்பட்டிருக்கும்.

இந்தப்பகுதியினை தொலைபேசியினுள் அதற்கெனஉள்ள பகுதியில் செலுத்திமேல் இருந்து கீழ்நோக்கி இழுப்பதன்மூலம் இந்த தொலைபேசிகள் இயங்கத் தொடங்கும்.

இயங்கிக்கொண்டிருக்கும் போது தொலைபேசியினுள் இந்த அட்டை இருக்கவேண்டிய அவசியமில்லை.

இதனால் தொலைபேசிஅட்டைகளை தொலைபேசியினுள் மறந்துவிட்டுச் செல்ல வேண்டிய தேவைஇருக்காது.

அத்துடன் இந்த நிலையங்களுக்கு இலக்கங்கள் இல்லாமையினால் வெளியில் இருந்து இந் நிலையங்களுடன் தொடர்புகொள்ளமுடியாது என்று அந்தஅதிகாரிதெரிவித்தார். (த-247)

## தென்பகுதி பூங்கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனை வாங்குவதில் மக்கள்நாட்டம்

(தென்மராட்சி)

தென்பகுதியில் இருந்து விற்பனைக்காகக் கொண்டு வரப்படும் பூங்கன்றுகளுக்கு யாழ்ப்பாணத்தில் பெரும் கிராக்கி ஏற்பட்டுவருகின்றது.

றோஜாக்கன்றுகள், புதிய வகை செம்பருத்திகள், குறோட்டன்வகைகள் போன்றவற்றினை பெண்களும்ஆண்களும் போட்டிபோட்டுக் கொண்டு கொள்வனவு செய்துவருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இதுவரை இல்லாதபூங்கன்றுவகைகளும் தென்பகுதியில்இருந்து கொண்டுவரப்படுவதால், அவை கொண்டுவரப்படும் நாளிலேயே முழுவதும் விற்பனையாகிவிடுவதையும் அவதானிக்க முடிகின்றது. (உ-77)

## படக் காட்சியும் விமர்சனக் கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

சலன சித்திரம் வடமராட்சிப் 'பிரதேசக் கிளையினால், இளம் இயக்குநனர் பாலாவின் வெற்றிப்படமான 'சேது' மற்றும் உள்ளூர் கலைஞர்களினால் தயாரிக்கப்பட்ட 'வெளிநாட்டு மாப்பிள்ளை, வீடியோ நாடகம் என்பன நாளை பி. ப. 2. 00 மணிக்கு வதிரி கரவெட்டியில் அமைந்துள்ள கிளை அலுவலகத்தில் காண்பிக்கப்படவுள்ளதுடன்,

மேற்படி படக்காட்சி தொடர்பான விமர்சனக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பி. ப. 3.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. (உ-106)

## சிந்தனைக்கு விருந்து

'பழையவன்' வெளிநாடு சென்றுள்ளதால் சிந்தனைக்கு விருந்தளிக்கும் கவிதைகள் வெளிவருவது சிறிது காலம் தடைபட்டிருக்கும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

(ஆ-ர்)

## தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கைக்காக அடுத்த மாத இறுதியில் அமெரிக்க படைகள் பிலிப்பைன்ஸ் செல்லும்

(மணிலா)

பிலிப்பைன்ஸில் நடைபெற்று வரும் உள் நாட்டு யுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வரும் முகமாக, அமெரிக்கா தனது படைகளை அங்கு அனுப்ப தீர்மானித்துள்ளது.

அங்கு, அனுப்பபடும் அமெரிக்கப் படையினர் பிலிப்பைன்ஸ் இராணுவத்துடன் இணைந்து தென் பிலிப்பைன்ஸ் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தென் பிலிப்பைன்ஸ் பகுதிகளில் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் இஸ்லாமிய போராட்டகுழுவுக்கு எதிராகவே அமெரிக்க இராணுவத்தினர் அனுப்பப்படவுள்ளனர்.

அடுத்த மாத இறுதியில் அங்கு செல்லவுள்ள அமெரிக்கப் படையினர், பிலிப்பைன்ஸ் இராணுவத்தினருக்கு 6 மாத கால பயிற்சியையும் வழங்கவுள்ளனர். (உ-8)

## நஷ்ட ஈடு பெற்ற பதினைந்து பேர் கைது

### போலி ஆவணங்கள் சமர்ப்பித்தனராம்

(வாஷிங்டன்)

கடந்த செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி நடத்தப்பட்ட அமெரிக்க வர்த்தக கட்டடத்தின் மீதான தாக்குதலில் பாதிக்கப்பட்டதாககூறி நஷ்ட ஈடுபெற்றுக் கொண்ட 15 பேரை அமெரிக்க பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இக்கட்டடத்தின் மீதான தாக்குதல்களை தொடர்ந்து தங்கள் தொழில்களை இழந்துள்ளதாகவும், வியாபாரத்தில் நட்டமடைந்ததாகவும் கூறி போலித்தகவல்களைச் சமர்ப்பித்து நஷ்டஈட்டை பெற்றுக் கொண்டனர் என்ற சந்தேகத்திலேயேபொலிஸார் இவர்களைக் கைதுசெய்துள்ளனர்.

இவர்கள் அனைவரும்தலா 52 ஆயிரம்அமெரிக்க டொலர்களை நஷ்டஈடாக பெற்றுள்ளனர்.

இவர்களை விடவேறுபலரும் இதுபோன்ற போலி ஆவணங்களைச் சமர்ப்பித்துநஷ்டஈட்டைப் பெற்றுக் கொண்டுள்ளனர் என அமெரிக்க புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-8)

## பங்களாதேஷ் ஜனாதிபதியை பதவி விலகுமாறு கோரிக்கை

(டாக்கா)

பங்களாதேஷ் ஜனாதிபதி சௌத்திரியை உடன் பதவி 'விலகுமாறு' பங்களாதேஷ் ஆளும் தேசியக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இவர் மீது, ஆளும் பங்களாதேஷ் தேசியக்கட்சி வைத்திருந்த நம்பிக்கை மழுங்கடிக்கப்பட்டு விட்டதென மேற்படி கோரிக்கை குறித்து பிரதமர் காலிதா ஜியா கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை சௌத்திரி கடந்த வருடமே ஜனாதிபதிப் பதவியை ஏற்றதுடன், மேற்படி கோரிக்கையை அவர் ஏற்று நடப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ-8)

## அமெரிக்க தூதரகம் மீண்டும் இயங்குகிறது

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தனில் உள்ள அமெரிக்க தூதரகம் செவ்வாய்க்கிழமை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

கடந்தவெள்ளிக்கிழமைஅமெரிக்கத் தூதரகத்துக்குமுன்னால் நடத்தப்பட்ட கார்க்குண்டு தாக்குதலை தொடர்ந்து இத் தூதரகம் மூடப்பட்டது.

தற்போது திறக்கப்பட்ட இத்தூதரகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பாகிஸ்தானின் பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர். (உ-8)

## சிலப்பதிகார ஆய்வரங்கு இரண்டாம் நாள் நிகழ்வில் கௌரவம் பெறுவோர்

(யாழ்ப்பாணம்)

இந்து சயய விவகார அலுவல்கள் அமைச்சும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து இன்று முதல் 3 தினங்கள் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறும் சிலப்பதிகார ஆய்வரங்கின் ஒரங்கமாக இந்து குருமார்கள் கௌரவிக்கப்படுவதுடன்,வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இந்து அனாதைச் சிறுவர்களுக்கு உதவுபொருட்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில்,நாளைய தினம் மு.ப.11.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் சிலப்பதிகார ஆய்வரங்கின் போது கௌரவிக்கப்படும் இந்துக் குருமார்களின் விபரங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு.

சங்கானை பிரதேச செயலகப் பிரிவு

கெ. சிவசுப்பிரமணியக் குருக்கள், சு. சுந்தராஜக் குருக்கள், அ. இரத்தினசாமிக்குருக்கள், ஆ. நாகராசா சர்மா, ச. நடராஜசர்மா, மு. பாலகுருசாமி,தி. பொன்னம்பலவாணர்,ச.சிவசர்மா, தி. கந்தசாமி ஐயர், இ. நடனஸ்கந்தசர்மா.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவு

ச. செல்லத்துரைக்குருக்கள், இ. இரட்னசபாபதிக்குருக்கள், சா. பாலசுப்பிரமணியக் குருக்கள், கே. கைலாசநாதக் குருக்கள், இ. உலகேஸ்வரக் குருக்கள், செ. நகுலேஸ்வரக் குருக்கள், செ. மங்கேஎஸ்வரக்குருக்கள்,சோ.சிவகுமாரசர்மா, ச. இராஜேஸ்வர சர்மா, ம. புஸ்பராசசர்மா,

ஊர்காவற்றுறை பிரதேச செயலகப்பிரிவு

பொ. வெங்கடேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ. நா.ஞானசம்பந்தகுருக்கள், சிவஸ்ரீ. கலைத்தீஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ.வி.ஈஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ. ப. ஆறுமுககுருக்கள், பிரம்மஸ்ரீ. சோ. குகனேசசர்மா,பிரம்மஸ்ரீ வி.ஜெகதீஸ்வர சர்மா, பிரம்மஸ்ரீ. ஜெயராம சந்திரகாந்த சர்மா. சிவஸ்ரீ. மகாகணபதிஸ்வர குருக்கள், சிவஸ்ரீ. கு. சண்முகராஜகுருக்கள்,

வேலணை பிரதேச செயலக பிரிவு

அ. அப்பாசாமிக்குருக்கள், வி. சோமஸ் கந்த சர்மா, ப. முத்துக்குமாரசாமிக்குருக்கள் சிவஸ்ரீசா. பாலசுந்தரக்குருக்கள், சிவஸ்ரீ இ.அப்பாசாமிக் குருக்கள், அப்பாசாமிசர்மா, ஸ்ரீநிவாசஐயர்சர்மா, சி. மனோகரராசக்குருக்கள், கை. வாமதேவக்குருக்கள், ச. சிவசுப்பிரமணிபக் குருக்கள்.

நெடுந்தீவுப் பிரதேசசெயலகப் பிரிவு

ஐ. பரமேஸ்வரசர்மா, பிரம்மஸ்ரீ கா. புவனேந்திர சர்மா.

உதவிப் பொருட்கள் வழங்கப்படவுள்ள இந்து அனாதைச் சிறுவர்களின் பெயர்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு.

சங்கானைபிரதேச செயலகப் பிரிவு

ஆ மணிவண்ணர். கே, ஜெயரூபன், க.ரஜீவன் வி.ததீஸ்வரராஜ், க.நிரோஜி ம. பாமினி,க. கவிதாசன்,

க. யாதவன்.மாருதி அமிர்தலிங்கம் பாமா, ஆ.கலீதரன். ச.ஜயந்தா, இ.நிஷாந்தன், வி.பிரியதர்சினி,கே. கயல்விழி,

மோ.சஞ்சீவ்,ஆ.வசந்தினி, அ.கேதீஸ், ஜெ. மதனகாந்தன்,இ.செந்தில் குமாரன், இ.யதுர்சன்,

உடுவில் பிரதேச செயலகப் பிரிவு

ஐ.தயாளினி,ச.காண்டீபன் ,வ. ஸ்ரீரங்கன்,தி. சிவனஜா, கோ.சிவமேகலா,கு.பாலமோகன், யோ.சிவரூபன், க.கஜேந்தினி, க.கார்த்திகா, ந. கவிதா,

யோ.ரஜீவன்,க.சுஜீவன், க.தினேசன், க.கம்சா, ர.ஸ்ரீபிரியா.

ச. சயந்தினி, அரிகரன், மு. பவினா, வீ. புவனரூபன், க. கரன்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவு

ர சி. சிவகரன், மோ. சசிகஇ.ன், த. சந்திரகுமார், சஞ்சீவன், இ. பரணீதரன், தெ. தர்சன், இ. பிரதீபன், செ. சந்திரசேகர், தி. குகேந்திரன், நா. லலீக்குமார், ச. அனோஜன், கு.இராஜ்குமார், பா. கோகுலன், க. ரதீஸ்குமார் இந்திரன் பிரதீபன், த. சுயந்தன், சி. விஜிதரன், நா. தர்சன், தெ. முரளி, க. அனோஜன், த. தனரூபன், செ. மயூரன், க. கீர்த்தனா, பொ. ரேவதி, பொ. துஷாந்தி, உ. சரத்குமார், றெ. சர்மினி, ச. றகுணா, சா. பிரதிபா, சு. நிரஜா.

நெடுந்தீவுபிரதேச செயலகப்பிரிவு

கு. ஜெயகரன், யோ. ரேணுகா, வை.காண்டீபன், ச.இராமசந்திரு, செ.சதீஸ், பா.குமாரு, தி.துஷாவதனி, தி.சங்கர்,க.லோகினி,க.துஷ்யந்தன், நா.துஷா, க.யோகேஸ்வரன்,சி.மயூரன், தி.பிரகலாதன், வி.சபேசன், சு.குசிதா, கா.சுபாசினி, ந.ஐங்கரன், இ.கலைவதனி, வா.சோபா,

## இஸ்ரேல் படைகள் பலஸ்தீனப் பகுதிக்குள் திடீர்ப் பிரவேசம்

(ஜெருசலேம்)

இஸ்ரேலியபடைகள மேற்கு கரையிலுள்ள மூன்றுபலஸ்தீனப்பகுதிகளுக்குள் பிரவேசித்துள்ளன.

இப்பகுதிகளிற்கு திடீரென பிரவேசித்த இஸ்ரேலியர்கள் அங்கு ஊரடங்கு உத்தரவை பிறப்பித்து தீவிரவாதிகளை தேடும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

நம்ழா நகருக்கருகே பெட்டூனியா என்னுமிடத்திலுள்ள பலஸ்தீன கட்டுப்பாட்டு நிலைகளை இஸ்ரேல்பொறுப்பேற்றிருப்பதாகவும் இஸ்ரேலிய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-8)

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பு தலைமையகம்,பல்வேறு பதவிகளுக்கும் அரச தனியார் துறையிலுள்ள சிரேஷ்ட அலுவலர்களிடமிருந்து நாடளாவியரீதியில் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

பிரதிப் பணிப்பாளர்,சட்ட அலுவலர்,கல்வி அலுவலர், ஆவணப்படுத்தும் அலுவலர், உதவிச் செயலாளர்,நிர்வாக உத்தியோகத்தர் ,ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் இம்மாதம் 26ஆம் திகதிபுதன்கிழமைக்கு முன்பாக தலைவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இல-36, கிங்ஸ்லி வீதி கொழும்பு 8 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் வந்து வலம்புரிக காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். (உ)

## கண்ணாமூச்சி விளையாடிய சிறுவர்கள் நால்வர் மூச்சுத் திணறி மரணம்

(லண்டன்)

லித்துவானியா நாட்டின் கிராமப்புறப் ஒன்றில்கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடிய நான்கு சிறுவர்கள் மூச்சுத்திணறி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

கண்ணாமூச்சி விளையாட்டில் ஈடுபட்டிருந்த சிறுவர்கள் மரப்பெட்டி ஒன்றினுள் ஒளித்து கொண்டு அதனை மூடியுள்ளனர். பின்னர் மூடியைத் திறக்க முடியாமல் அந்தப் பெட்டியினுள்ளேயே நான்கு சிறுவர்களும் மூச்சுத் திணறி உயிரிழந்துள்ளனர்.

மேற்படி விளையாட்டில் ஈடுபட்ட சிறுவர்களைக் காணாது தேடிய பெற்றோர் சிறுவர்கள் நால்வரையும் சடலமாக மேற்படி மரப் பெட்டிக்குள் இருந்து மீட்டுள்ளனர். (த)

## தமிழ்த் தினப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-19)

### காளைமாடுகள் வந்து சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையத்திற்குதிருகோணமலையிலிருந்து காளை மாடுகள், கடாக்கள் என்பன கொண்டுவரப்பட்டுள்ளன. (உ-19)

## அமெரிக்க அதிபரை பரபரப்பில் ஆழ்த்திய மர்ம விமானம்

(வாஷிங்டன்)

வெள்ளை மாளிகையின் மேல் கட்டுப்படுத்தப்பட்ட வான் பகுதியில் மர்ம விமானம் ஒன்று பறந்ததனால் நேற்று முன்தினம் இரவு அம்மாளிகை முற்றாகவெறிச்சோடியது.

தலைநகர் வாஷிங்டனில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துவிட்டு மாளிகை திரும்பிய அதிபர் புஷ், இவ்விமானம் மாளிகையின் மேல் பறப்பதை அவதானித்ததையடுத்து, அங்குள்ள எல்லோரும் உடனடியாக வெளியேற வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்.

பேகன் தேசிய விமான நிலையத்தை நோக்கி பறந்து கொண்டிருந்த இவ்விமானம், கட்டுப் பாட்டுக் கோபுரத்துடன் தொடர்பு கொள்ளாமல் பறந்ததனால் அது திடீரென அதிபர் மாளிகையின் மேல் பறக்க நேரிட்டது என சட்ட அமுலாக்கஉயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இருந்த போதிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே அங்கு பணியாற்றிய ஊழியர்கள்,உத்தியோகத்தர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த செப்ரம்பர் மாதம் அமெரிக்கா மீதான தாக்குதலை தொடர்ந்துஅமெரிக்கா தனது முக்கியமான பிரதேசங்களின் மீதுமிகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## வலய மட்ட சிறுவர் நாடகப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வலய மட்ட சிறுவர் நாடகப் போட்டி எதிர்வரும் 25 ஆம் திகதிசெவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கோட்ட மட்டப் போட்டியில் முதலாம், இரண்டாம் இடத்தைப் பெற்ற பாடசாலைகள் இதில் பங்கேற்கவுள்ளன. (உ-19)

தன்னெஞ்சறிவது பொய்யற்க
பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்

குறள்

# வலம்புரி

## கழுகுப் பார்வை

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லிவில்ஸ் சமாதானப் பேச்சுவார்த்தை குறித்துத் தொலைக்காட்சிக்குப் பேட்டி ஒன்றை வழங்கியுள்ளார். அப்பேட்டியிலும் வழமையாகப் புலிகளுக்கு எதிராகப் பாடுகின்ற பண்ணை இசைக்கத் தவறவில்லை.

சமாதான முயற்சியில் பிரதமர் ரணிலும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் விசுவாசத்துடன் செயற்படுகின்றனர். ஆனால் இது விடயத்தில் விடுதலைப்புலிகள் குறித்து தன்னால் எதுவும் கூறமுடியாது எனத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருக்கும் அமெரிக்கத் தூதுவர் பலதடவைகள் தமிழ் மக்களுக்கு - விடுதலைப் புலிகளுக்கு எதிராக குரல் கொடுத்து வந்துள்ளார். ஒரு நாட்டின் இராஜீக உறவைப் பேணவேண்டிய ஒருவர் ஓர் இனத்திற்கு எதிராக பொறுப்பற்ற முறையில் கருத்துக்களை வெளியிடுவதுஓர் பொறுப்பான செயலல்ல.

விடுதலைப் புலிகளின் தடையை நீக்கக் கூடாதெனவும் விடுதலைப்புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை ஒப்படைக்கக் கூடாதெனவும், ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் நடத்திவருகின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ஷ தலைமையில் சமாதானத்திற்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் நடந்திருப்பதை அறிந்திருந்த அமெரிக்கத் தூதுவர் அதுபற்றி எதுவும் கூறாமல் விட்டது அவர் நடுநிலையில் இருந்து மீறிவிட்டார் என்பதையும், அவர் ஒரு பக்கம் சார்ந்து அறிக்கைகளைவிடுவது உள்நோக்கமுடையதென்பதையும் தெளிவுபடுத்தியுள்ளது.

சமாதான முயற்சிக்கு தென்னிலங்கையில் பௌத்த பீடங்களும் இனவாதக் கட்சிகளும் எதிராகப் போர்க்கொடி தூக்கிஇருப்பதை கொழும்பில் இருக்கும் அமெரிக்கத்தூதுவர் அஸ்லிவில்ஸ் அறியாமல் போனமை, அமெரிக்காவின் கழுகுக்கண்கள்இலங்கைத் தமிழர்களை குறியாக்கியுள்ளதென்பதைச் சுட்டி நிற்கிறது.

# அவலச்சுவைமிகுந்த ஷேக்ஸ்பியரின் ஒதெல்லோ

# நாடகம் பார்த்தவர்கள் பயன் பெற்றவர்களே!

## திறனாய்வுக் களம்

### எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி

யாழ். திருமறைக் கலாமன்ற கலைஅரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை ஆங்கில நாடகமான 'ஒதெல்லோ' (OTHELLO) மேடையேறியது. நீண்டகால இடைவெளியின்பின்னர் ஆங்கில நாடகமொன்றைக்கண்டு களிக்கும் சந்தர்ப்பத்தை யாழ்ப்பாணமக்கள் இதன் மூலம் பெற்றனர். காதல், வெறுப்பு பொறாமைபோன்ற உணர்ச்சிகளிடையே உருவாகும் முரண்பாடுகளை அடிப்படையாக வைத்து ஷேக்ஸ் பியரால் எழுத்துருவாக்கப்பட்ட 'ஒதெல்லோ' திருமறைக்கலாமன்ற இளம் நடிகர்களால் அரங்கில் புத்துயிர்பெற்றது. நாடகமும் அரங்கியலும், ஆங்கில இலக்கியம் ஆகிய துறைகளைப் பயிலும் மாணவர்களுக்கு இவ்வனுபவம் நல்லதொரு வாய்ப்பாக அமைந்திருக்கும். சுமார் ஒருமணிநேர ஆற்றுகை விறுவிறுப்பாகவும் மயிர்க்கூச்செறிவதாகவும் இருந்தது. மகாகவி ஷேக்ஸ்பியர் இங்கிலாந்திற்கு மட்டுமல்ல, முழு உலகிற்குமே சொந்தமானவர் என்பதை நாடகத்தைப் பார்வையிட்ட அனைவரும் தெளிந்திருப்பர்.

மனித உணர்வுகள்

உலகம் ஒரு நாடகமேடை அதில் நாமெல்லாம் நடிகர்கள் என்றுகூறிய ஷேக்ஸ்பியர் பற்றி ஒரு விமர்சகன் சொன்னான். இந்த மனிதனைப் பற்றி அதிகம் எழுதப்பட்டிருக்கிறது. இருந்தும் கடவுளுக்கு அடுத்து அதிகம்படைத்தவர் இவர். இந்த மதிப்பீடே ஷேக்ஸ்பியர் பற்றிய மதிப்புரைகளில் மிகவும் பெறுமதி வாய்ந்தது, என்று அன்றைய தினம் முன்னுரை ஆற்றிய கவிஞர் சோ. பத்மநாதன் குறிப்பிட்டிருந்தார். 38 நாடகங்களை எழுதியதுடன் செயல்முறை நாடக ஆசிரியராகவும் இருந்த ஷேக்ஸ்பியர் கதைஎன்று புதிதாக எதையும் சொல்லவில்லை. ஏற்கனவே இருந்த கருக்களுக்கு வியாக்கியானம் கொடுத்தார். வரலாற்றின் ஊடாகக் கற்றுவந்த பாடத்தை மனித உணர்வுக் கோலத்தை வஞ்சகம், பொறாமை, சூதுபோன்ற குண இயல்புகளை மேடையில் தனது பாத்திரம் மூலம் உலாவவிட்டார். அவை இன்றும் மக்களின் மன அரங்குகளில் உலாவிக்கொண்டிருக்கின்றன.

ஷேக்ஸ்பியர் தமது கலை நேர்த்தியின் முதுநிலையில் படைத்தவை துன்பியல் அல்லது அவலச்சுவை நாடகங்கள். அவை அவரின் உச்ச படைப்புகளாகவும் இருந்தன. அவலச்சுவையில் இனங்காணக்கூடிய கோலங்களுக்கு உயிர்கொடுப்பதில் வெற்றி கண்ட அவரின் ஒதெல்லோவில், வாழ்விலே ஒன்ற முடியாதவர்களாகக் காட்டப்பட்ட ஒதெல்லோவும் டெஸ்ரிமோனாவும் சாவில் இணைகிறார்கள்.

சந்தேகம்

ஒதெல்லோ உயர்ந்தகுணங்கள் கொண்ட ஓர் மூர் இனத்து வீரன்வெனிஸ் நகரத்தின் படைத்தளபதி. அவன் அன்பில் இணைந்த பிரபுவின் மகளாகிய டெஸ்டிமோனாவை தந்தையின் விருப்பம் இன்றியே மணந்து கொள்கிறான். ஆனந்தமாய் காதல் வானில் சிறகடித்த அந்த ஜோடிக்குள் பிரளயம் புகுந்தது அதாவது துருக்கியருக்கு எதிராகப் போர் புரிய சைப்பிரஸ் தீவுக்கு அனுப்பப்படுகிறான். ஒதெல்லோ. அவனுடன் இணைந்து செல்கிறாள் டெஸ்டிமோனா போரிலே வென்றவர்களின் வாழ்விலே புயல்வீச ஆரம்பிக்கிறது. படைவீரர்களில் ஒருவனாகிய இயாகோமுதன்நிலை படைத்தளபதி நிலை தனக்குக் கிடைக்காமல் ஒதெல்லோவால் கஸியோவுக்கு வழங்கப்பட்டதால், பொறாமையுற்றவன் புல்லுருவியாக மாறுகிறான். ஒதெல்லோவின் நண்பனைப் போல் பழகி டெஸ்டிமோனாவுக்கும் கஸியோவுக்கும் இடையில் காதல் தொடர்பு இருப்பதாகக் கூறி அவனுள் சந்தேகப் புயலைக் கிளப்புகிறான். உயர் குணம் மிக்க ஒதெல்லோ சந்தேகப் பேயாக மாறுகின்றான் விளைவு ... ஒரு கொலைகாரனாக மாறும் அளவுக்கு அவன் நலிவடைகின்றான்.

யதார்த்தம் தெரிந்தது

இந்நாடகத்தில் ஒதெல்லோவாக இதை நெறியாள்கை செய்த ஜி. ரஜீவன் பிரான்சிசும் டெஸ்டிமானாவாக ஜி .ஒலிவேட் தாரணியும் தோன்றுகிறார்கள். டெஸ்டிமோனா படுக்கை அறையில் தூங்கிக்கொண்டிருக்கிறாள். ஒதெல்லோ தலையணையால் அவள் வாயை அடைத்துக் கொலை செய்கிறான். இக்காட்சி யதார்த்த பூர்வமாக இருந்ததைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். இதன்போது பார்வையாளர் வரிசையில் அமர்த்திருந்த அருட்சகோதரிகள் ஐயோ கொடுமை என்று மனம் நொந்து கொண்டனர். காட்சி அமைப்புகள் எளிமையானவையாகவும், கலை நுட்பத்தோடும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.
படுக்கையறைக் காட்சியும் சிற்றுண்டிச் சாலைக் காட்சியும் பிரமாதம்.

யாழ். மண்ணிலே ஆங்கில மொழியின்தரம் நலிவடைந்து சென்று கொண்டிருக்கும் இந்தநேரத்திலே முன்னின்று உழைத்தஇயக்குநர், நடிகர்கள், மற்றும் அணிசேர் கலைஞர்கள் பாராட்டுக்குரியவர்கள். இயாகோவாக ரி.கண்ணன், எமிலியாவாக ரி. சுயனந்தியும் கஸியோவாக ரி. யஸ்ரின் ஜெலூட்டும் ப்ரியன்காவாக ஏ. அர்ச்சனவும் ரொட்ரிகோவாக பி. எக்ஸ்சஸிசும் கிரால்டாக என். பிஸ்மாக்கும். லாடோவிகோவாக யூலிஸ் கொலினும், மற்றும் பாத்திரங்களாக ஜே.பொபின்ரன், ஆர். ஜெயகாந்தன் ஜே. ஜெயகாந்தன், எஸ். ஜோர்ச் கென்றி, எஸ்.லீவன், சிலிவ், ஆர். மோகன்ராஜ், ஜே.அருன்ராஜ், இ. நிஷாகர'ன், ஜே.ஜக்சன் ஆகியோர் ஆங்கில வசனம் பேசி ஆற்றுகையை நகர்த்தினர். இசை ஆங்கிலப் பாணியிலேயே இருந்தது, ஒலி, ஒளி அமைப்புகள் சீராக மேற்கொள்ளப்பட்டன.

அவலச்சுவை

ஷேக்ஸ்பியர் உலகமகாகவி. எங்கெல்லம் ஆங்கில, இலக்கியம் பற்றி, நாடகம் பற்றி பேசப்படுகிறதோ அங்கெல்லாம் ஷேக்ஸ்பியர் நிறைந்திருப்பார். அந்தளவுக்கு உலக கலை மகுடத்தில் மதங்க சூடாமணியாகத் திகழும் ஷேக்ஸ்பியரின் படைப்புகள் அனேகம் அவரது நாடகங்களில் முதன்மை பெற்றிருப்பது அவலச்சுவை நாடகங்கள், அவலச்சுவை என்பது 'உயர்குணங்கள் நிறையப் பெற்ற மானிடன் ஒருவனின் சிறப்புகள் நலிவடைந்து இழிநிலை அடையும் போது ஏற்படும் பரிவிரக்கமே ஆகும்.' இத்தகைய அவலத்தை வெளிப்படுத்தியநாடகங்களில் ஒதெல்லோ முன்மையானது என்று இத்துறைசார் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

வேட உடை- ஜே. இக்னேஸ்சியஸ், ஒப்பனை-எம். தைரியநாதன், எஸ். லீவன் சிலிவ், மேடை அமைப்பு- ஏ.ஜோசப், காட்சி அமைப்பு- ரி. யஸ்ரின் ஜெலூட், வி. சுமன்ராஜ், ஒலி, ஒளி அமைப்பு-ஏ. ஜோசப், எம். ரெமி ஆனந், சி.விஜய்சந்திரன், இசை அமைப்பு- கே. வசந்தகுமர ஆகியோரும் மேற்பார்வையை ஜே.ஜோண்சன் ராஜ்குமாரும் செய்திருந்தனர். யாழ். திருமறைக்கலாமன்றத் தயாரிப்பால் அவலம் சுவைக்க அரங்கு அழைத்தது ஷேக்ஸ்பியரின் ஒதெல்லோ.

## தினசரி தியானம்

### விந்தை

பொய்யெல்லாம் ஒன்றாய்ப்
பொருத்திவைத்த பொய்யுடலை
மெய்யென்றால் மெய்யாய்
விடுமோ பராபரமே.

- தாயுமானவர்

சர்வேசுவரா, நீ எனக்குச் சொந்தமாயிருந்தும் நான் ஒன்றும் இல்லாதவன் போல வருந்துவது எதற்காக.

மனிதன் செயல் விந்தைக்கேதுவானது. இவனுடைய உடல் அழியும் தன்மையது. அது தேய்ந்து, தளர்ந்து, மறைவது திண்ணம். அத்தகைய நிலையற்ற உடலை நிலைபேறு உடையதாக்க மனிதன் ஓயாது முயன்று வருகிறான். நலன் அனைத்துக்கும் முதலாயிருப்பது கடவுள் அருள். கடவுள் அருளை நாடுபவர்க்கு அதை நல்க அவர் காத்துக் கொண்டிருக்கிறார். அருளைப் பெற முயலாது உடலை உறுதிப்படுத்த மனிதன் ஓயாது முயலுகிறான், என்னே!

- ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்

## சிவாவின் மறைவுக்கு அனுதாபப் பிரேரணை

(கொழும்பு)

காலம் சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் மு. சிவசிதம்பரத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில்நிறைவேற்றப்பட்டது.

இந்த அனுதாபப் பிரேரணையை நீதி, சட்டச் சீரமைப்பு, இன ஒருமைப்பாட்டு அமைச்சர் லொக்கு பண்டார சமர்ப்பித்தார்.

தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ, இரா. சம்பந்தன் உட்பட பலரும் அனுதாபம் தெரிவித்து அங்கு உரையாற்றினார்கள்.

(உ-8)

## காரைநகர் ஆஸ்பத்திரிக்கு பல் வைத்தியத்திற்குச் செல்வோர் ஏமாற்றம்

(காரைநகர்)

காரைநகர் கிராமிய வைத்தியசாலையில் இயங்கிவந்த பல் வைத்திய நிலையம் சில மாதங்களாக இயங்காதநிலையில் உள்ளதால் அங்கு வைத்திய உதவியை நாடிச் செல்வோர் ஏமாற்றமடைந்து வருகின்றனர்.

காரைநகரில் கிழமை நாட்களில் இயங்கி வந்த பல் வைத்திய நிலையத்தில் கடமையாற்றிய வைத்திய அதிகாரி இடமாற்றம் பெற்றதைத் தொடர்ந்தே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் காரைநகர் பல் நோயாளர்கள் பல கிலோமீற்றர் தூரம் சென்று வேறிடங்களில் சிகிச்சை பெறவேண்டியுள்ளது.

(உ-246)

# புலி உறுப்பினர்கள் மீதான தாக்குதல்
# சமாதான முன்னெடுப்புக்கு குந்தகம்

## யாழ் மாவட்ட அரசியல் துறை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

வேலணையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற தாக்குதல் சம்பவம் குறித்து விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை விபரம் வருமாறு. தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவக அரசியல் பொறுப்பாளர் செம்மணனும், தயாளன் என்ற போராளியும் நிராயுதபாணிகளாக அரசியல் வேலை செய்து கொண்டிருந்த சமயம் 20.06.2002 இரவு 9மணியளவில் வேலணை பஸ்கொம்பனிச் சந்தியில் ஸ்ரீலங்கா கடற்படையும், தேசவிரோத சக்திகளான ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் இணைந்து கொலை செய்யும் நோக்குடன் படுமோசமாகத் தாக்கப்பட்டனர்.

சம்பவம் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் சுற்றாடலில் வாழும் மக்கள் பலர் கேள்விப்பட்டு திரண்டு கூடி கூக்குரலிட்டு சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்த போது குழுவினர் ஓடித்தப்பினர்.

இச்சம்பவமானது சமாதானத்தை விரும்பும் சகல மக்களுக்கும் பெரும் அதிர்ச்சியையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தப்படி நிராயுதபாணிகளாக, சமாதான முன்னெடுப்புக்களுக்காக அரசியல் பணி புரிந்துவரும் விடுதலைப் புலிப் போராளிகளுக்கு இந் நடவடிக்கை பெரும் அச்சுறுத்தலைக் கொடுத்திருக்கிறது.

போரை விரும்பாது சமாதான முறையிலேயே எமது அரசியல் இலக்குகளை வேண்டி நிற்கும் தற்போதைய அரசியல் சூழ்நிலைகளுக்கு இச்செயற்பாடு பெரும் குந்தகம் விளைவிக்கின்றது.

எனவே இந்நடவடிக்கையில் இருந்து புலனாகுவது என்னவெனில், காலங்காலமாக சமாதானத்தை வேண்டி நிற்கும் எமது இனத்தின் மேல் வன்முறையைப் பிரயோகித்து எமது மக்களின் எழுச்சியையும் சுதந்திரத்தையும் ஆயுதம் கொண்டு அடக்கி விட ஸ்ரீலங்கா அரசின் கடற்படை முயன்று நிற்கிறது.

சமாதானத்திற்கு குந்தகம் விளைவிக்க, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சீர்குலைக்கும் நடவடிக்கைகளை அரசபடைகளும் தேசவிரோத சக்திகளும் கைவிட்டு சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவது நல்லது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ந)


### இலங்கை றோட்டறக்ட் கழகங்கள் இணைந்து நடாத்தும்

### மாபெரும் இலவச மருத்துவ முகாம்

**இடம் :-** மானிப்பாய் இந்துக் கல்லூரி
**காலம் :-** 23.06.2002 (ஞாயிற்றுக்கிழமை)
மு.ப 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை

கொழும்பில் இருந்து விசேடமாக வருகை தந்துள்ள பிரபல்ய வைத்திய குழுவின் சிகிச்சையும் இலவச மருந்து விநியோகமும் நடைபெறவுள்ளது. தொடர்ந்து மூக்கு கண்ணாடிகள் மற்றும் கல்வி உபகரணங்கள் அத்தியாவசிய பொருட்கள் விநியோகமும் நடைபெற உள்ளது. அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இலங்கை றோட்டறக்ட் கழகங்கள்

[5476]



### சமையல் எரிவாயு

### LAUGFS - LANKA GAS

மலிவு விலையில் உற்பத்தி நிறுவனத்தில் இருந்து நேரடியாக தருவிக்கப்பட்ட:-

- சமையல் எரிவாயுச் சிலிண்டர்கள்
- சமையல் எரிவாயு அடுப்புகள்
- சமையல் எரிவாயு அடுப்புகளுக்கான "ரெகுலேட்டர்கள்" (REGULATORS), இணைப்புக் குழாய்கள் (HOSE PIPE)
- சமையல் எரிவாயு அடுப்புக்கான "பேணர்கள்" (BURNERS)
- எரிவாயு விளக்குகள்

அவற்றிற்கு உரிய வாயு சிலிண்டர்கள் என்பன எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்கள்
ஈஸ்வர அம்பாள் அன் கோ
155(27) ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்



சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான
### நல்லெண்ணெய்
### V.S.P.லஞ்ஓயில்

தயாரிப்பாளர்:
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

[C/4243]


**சமாதானத்திற்கு குந்தகம்**

**விடுதலைப் புலி...**

தாக்கத் தொடங்கினர். தாம் விடுதலைப்புலி உறுப்பினர்கள் என தமது அடையாள அட்டைகளைக் காட்டி அடையாளப்படுத்திய போதும் அதனைப்பறித்து வீசி எறிந்தனர். இதன் போது தயாளன் என்ற போராளியும் படுமோசமாகத் தாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் நடத்தியவர்களில் 4பேர் முகமூடியுடனும், ஒருவர் கடற்படையின சீருடையுடனும், மூன்று பேர் இராணுவச் சீருடையுடனும் வந்திருந்தனர். முகமூடியுடன் வந்தவர்கள் சாதாரண உடையுடன் காணப்பட்டனர்.

இவர்கள் தாக்கப்பட்டது மட்டுமல்லாது அவர்களை பிக்கப் வாகனம் நோக்கி இழுத்துச் சென்றுள்ளனர். அவ்வேளை போராளிகள் சயனைற் அருந்த முற்பட்ட வேளையில் அங்கு கூடிய மக்கள் கூக்குரலிட்டு அயலவர்களின் உதவியுடன் தாக்குதல் முறியடிக்கப்பட்டு காப்பாற்றப்பட்டனர்.

நிலைமையை அறிந்து அவ்விடத்தில் மக்கள் குழுமியதைத் தொடர்ந்து தாக்குதல் நடத்தியவர்கள் வாகனத்தில் திரும்பிச் சென்று விட்டதாகவும் தெரியவருகிறது.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் கண்காணிப்புக்குழுவினருடன தொடர்பு கொண்டு நிலை மையை எடுத்துக் கூறினர். நேற்று அதிகாலை 2.30 மணியளவில் அங்கு சென்ற கண்காணிப்புக்குழுவினர் சம்பவம் நடந்த இடத்திற்கு நேரடியாக விஜயம் செய்து மக்களிடம் விசாரித்து நடந்தவற்றைக் கேட்டறிந்துள்ளனர்.

அத்துடன் பாதுகாப்பு அமைச்சுக்கும் இது தொடர்பாக தெரியப்படுத்தியுள்ளதாகவும் அறியவருகிறது.

இது இவ்வாறு இருக்க விடுதலைப்புலி உறுப்பினர்கள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்துக் கண்காணிப்புக்குழுவினருக்கு எடுத்துக் கூறுவதில் போதிய தொடர்பாடல் வசதியின்மையால் பலமணிநேரம் எடுத்ததாகவும், தகவல் கிடைத்து ஸ்தலத்திற்கு விரைந்த கண்காணிப்புக்குழுவினரை கடற்படையினர் மணித்தியாலக் கணக்கில் தடுத்து வைத்திருந்ததாகவும் நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (ம)

**ஐரோப்பியக் குழு...**

விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தின் போது இடம் பெற்ற இக்கொலை தொடர்பான பூரணமான விசாரணைகளை மேற்கொள்ள அவ்வரசு தவறியுள்ளது. தற்போது பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளில் மும்முரமாக ஈடுபட்டு வருவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இனிவரும் காலங்களில் இலங்கையிலுள்ள எந்தவொரு ஊடகவியலாளருக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் சமயத்தில் அது தொடர்பாக ஐரோப்பிய ஊடகவியலாளர் நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (உ-8)

**கண்காணிப்புக் குழு...**

சம்பவத்தை கேட்டறிந்த கண்காணிபபுக்குழுத் தலைவர் ஹெவ்டே இது யுத்த நிறுத்த மீறல் என ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது. (ம)

**புலிகளின்...**

தீவிரவாதக்கும்பல் ஒன்றே காரணம் எனவும் இதில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சதி எனவும் விடுதலைப்புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தாக்குதல் நடைபெற்றபோது புலி உறுப்பினர் எவரும், அங்கு இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## யெகோவாவின் இருநாள் மாநாடு

(யாழ்ப்பாணம்)

யெகோவாவின் சாட்சிகளின் வட்டார மநாடு இன்றும்நாளையும் மானிப்பாய நகர சபை மண்டபததில் நடைபெறவுள்ளது. இன்றும் நாளையும் காலை 9.50தொடக்கம் பி.ப 3.50 மணி வரையும் இம் மாநாடு நடைபெறும. (த)

**வேலணைத் தாக்குதல்...**

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இச்சம்பவம் குறித்து யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவில் இன்று உயர் மட்ட மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது. இம்மாநாட்டில் யாழ் மாவட்டக் கடற்படைத்தளபதி கலந்துகொள்வார் என்றும் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (வ)

### உலகக்கால்பந்துப் போட்டி

## அரையிறுதி ஆட்டத்திற்கு பிரேசில் - ஜேர்மன் தகுதி

(செசூக்கா)

உலகக் கோப்பை கால்ப்பந்துப் போட்டிகளில் நேற்று நடந்த கால் இறுதிப் போட்டிகளில் வெற்றிபெற்று பிறேசிலும், ஜேர்மனியும் அரையிறுதிப் போட்டியில் விளையாட தெரிவாகியுள்ளன.

யப்பானில் நடந்த பிறேசிலுக்கும் இங்கிலாந்திற்குமிடையிலான போட்டியில் பிறேசில் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியதன் மூலமும் தென்கொரியாவில் நடந்த மற்றைய போட்டியில் ஜேர்மனி 1:0 என்ற கோல் வித்தியாசத்தில் அமெரிக்காவை தோற்கடித்ததன் மூலமும் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன.

நேற்றைய போட்டிகளில் அரையிறுதிக்குத் தெரிவான அணிகளான பிறேசில் 4முறையும், ஜேர்மனி 3முறையும் உதைப்பந்தாட்ட சம்பியன்களானதும்.

கடந்த உலகக்கிண்ண போட்டியில் பிறேசில் இறுதிவரை விளையாடி பிரான்சிடம் தோற்றுப் போனதும் குறிப்பிடத்தக்கது.

இன்று நடைபெறும் கால் இறுதிப்போட்டிகளில் ஸ்பெயினை எதிர்த்து கொரியாவும் துருக்கியும் மோதவுள்ளன. (ந.5)





### யாழ். மாவட்ட ரீதியான ஆண், பெண் இருபாலாருக்குமான கரம் ஒற்றையர், இரட்டையர், கலப்பு ஆட்டங்கள்

யாழ் பல்கலைக்கழகத்தின் விளையாட்டவையின் கரம் அணியினால் நடாத்தப்படும் இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் விண்ணப்பப்படிவங்ளை உடற்கல்வியலகில் பெற்று 06.07.2002 ற்கு முன் பூர்த்தி செய்து ஒப்படைக்கவும். மேலதிக விபரங்களை உடற்கல்வியலகில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
கரம் அணி (பெண்கள்)

[C/4512]


### மரண அறிவித்தல்

**மாணிக்கவாசகர் விஜயவர்மன்**
(EXPO வீடியோ உரிமையாளர்)

கே.கே.எஸ் வீதி கோண்டாவிலைச் சேர்ந்த எக்ஸ்போ உரிமையாளரான மாணிக்கவாசகர் விஜயவர்மன் 21.06.2002 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

[C/4513] தகவல் : மனைவி